
புரட்டாதி 1982
SEPTEMBER

# கமநலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Publications of the Agrarian Research and Training Institute*

RESEARCH STUDY SERIES — LOCAL

| | | |
|---|---|---|
| 1. Thattumaru Kattimaru System of Land Tenure — Wickremasinghe, Gamini and Moore M. P. (1978) | Rs. | 7.50 |
| 2. The Citronella Industry in the Hambantota District Perera M., Abeyratne F. (1978) | Rs. | 5.00 |
| 4. The Minipe Colonisation Scheme - An Appraisal — Wanigaratne R. D. (1979) | Rs. | 10.00 |
| 4. Cotton - The Economic of Expansion in Sri Lanka — Farrington J. (1979) | Rs. | 10.00 |
| 5. Some Issues Confronting the Rehabilitation of Major Irrigation Schemes in the Dry Zone — Ranatunga A. S., Farrington J., Abeysekera F. | Rs. | 15.00 |

OCCASIONAL PUBLICATION SERIES

| | | |
|---|---|---|
| 6. Group Production - A case study of an Experiment conducted in Beminiwatta in the Kegalle District of Sri Lanka — Gooneratne W., Olesiak K. P. and Samad M. (1977) | Rs. | 5.00 |
| 7. Periodic Rural Market in the Kurunegala District — Senanayake, S. M. P. (1980) | Rs. | 10.00 |
| 8. Land Alienation under recent Land Reform — Wanigaratne R. D. and Samad M. | | |

Inquiries ;

Publication Assistant,
Agrarian Research and Training Institute,
P. O. Box 1522,
114, Wijerama Mawatha,
Colombo-7 - SRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 998

# கமநலம்

மலர் : 9
இதழ் : 3
1982

கமக்காரர்களின் மத்தியில் தன்நம்பிக்கையையும் மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி நிரந்தரமானதொன்றாக்கிக் கொள்ள இச்சஞ்சிகை உதவும்.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் காலாண்டு வெளியீடு.

## பொருளடக்கம்

பக்கம்

2. பெண்கள் + அபிவிருத்தி = முன்னேற்றம்
3. பெண்களுக்கென்றொரு பயிற்சி நிலையம்
8. திருவையாறு படித்த மகளிர் குடியேற்றம்
12. போஷாக்கிலும் உணவுற்பத்தியிலும் பெண்கள் பங்கு
14. வீட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்கள் முன்னணி
17. பொருளாதாரத் துறையில் பெண்கள் பங்கு
20. சாடியிலுள்ள செடியை மாற்றும் முறை
23. வீட்டுத் தோட்டமும் பெண்களும்
24. மங்கையர் ஏடு
26. கமநலம் குறுக்கெழுத்துப் போட்டி
28. வீட்டுத் தோட்டம் அமைப்பது எப்படி?

ஆசிரியர்கள் ;
க. தில்லைநாதன்
சோ. ராமேஸ்வரன்

அட்டைப் படம்:

கமத்தொழில் நடவடிக்கைகளில் பெண்கள் பங்கெடுப்பதைச் சித்தரிக்கிறது,

விலை ரூபா 1-50
வருட சந்தா ரூபா 5-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் + அபிவிருத்தி = முன்னேற்றம்

இலங்கை அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாடாகும். கைத்தொழில், கமத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் நாடு நாளுக்கு நாள் முன்னேற்றம் கண்டு வருகிறது. இம்மூன்று துறைகளின் முன்னேற்றத்தின் பலனுக வேலையில்லாத் திண்டாட்டம் அருகி வருகின்றது. இதே நேரம், அபிவிருத்தித்துறையில் பெண்களின் பங்கும் அதிகரித்து வருகின்றது.

முன்னைய காலங்களில் பெண்கள் குடும்பத்தை நிருவகிக்கும் பொறுப்பினை ஏற்று அதனைத் திறம்பட நடத்தி வந்தார்கள். காலம் மாற மாறப் பெண்களின் அந்தஸ்து, நிலை மாறத் தொடங்கவே அவர்களும் ஆண்களைப் போல வேலைக்குப் போகத் தொடங்கினர். ஆரம்பத்தில் ஆசிரியர்கள், தாதிமார் போன்ற தொழில்களுக்குள் வரையறுக்கப்பட்டிருந்த பெண்கள் நாளடைவில் வைத்திய, பொறியியல் துறைகளிலும் புகுந்தனர். இன்று பெண்கள் ஆண்களுடன் சரிசமனுக வேலை செய்வது கண்கூடு.

நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அவர்களும் கணிசமான பங்கினை வகிக்கிருர்கள். அவர்கள் சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் அளவுக்கு முன்னேறி விட்டார்கள்.

கமத்தொழில், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் அடிமட்ட நிலையில் இருந்து உயர்மட்ட நிலை வரையான சகல மட்டங்களிலும் அவர்களின் ஆற்றல், திறமை ஆகியன உபயோகிக்கப்படுகின்றன.

பெண்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரியும் வகையில் அவர்களுக்கு அறிவூட்டுவதற்காக தனியான பாடசாலைகள், பயிற்சி நிலையங்கள், பயிற்சி நெறிகள் போன்றவற்றை அமைத்துக் கொடுப்பதிலும் அரசாங்கங்கள் நடவடிக்கை எடுத்தன; எடுத்து வருகின்றன. அத்துடன் சமூகத்தில் அவர்கள் நல்லதொரு நிலையை அடைய வேண்டும் என்பதற்காக அரசாங்கங்கள் பல நல்ல திட்டங்களை தீட்டிவருகின்றன.

பெண்கள் மேலே குறிப்பிட்ட மூன்று துறைகளிலும் ஈடுபட்டாலும் கமத்தொழில் துறையிலேயே அதிகளவு ஈடுபட்டுள்ளனர் என அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. கமத்தொழில் துறையில் அவர்கள் மண்ணைப் பண்படுத்துவதிலிருந்து நெல்லை அரிசியாக்கி மாவாக்கும் வரையிலான சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். அத்துடன் அவற்றை உணவாகச் சமைத்துக் கொடுக்கும் காரியத்தையும் அவர்களே மேற்கொள்ளுகின்றனர். எனவே, இவர்கள் இத்துறையில் முக்கிய பங்கினை எடுக்கிருர்கள் என்று சொன்னுல் மிகையாகாது.

இவ்விதழில் 'கமத்தொழிலில் பெண்களின் பங்கு' என்ற பொதுவான கண்ணேட்டத்தில் கட்டுரைகளை வெளியிட்டுள்ளோம். இக்கட்டுரைகளை வாசிக்கும் போது பெண்கள் எமது நாட்டின் அபிவிருத்தித்துறைகளில் எவ்வாறுன பங்கினை வகிக்கிருர்கள் என்பதை நீங்கள் சுருக்கமாக, ஆனுல் துலாம்பரமாக அறியலாம் என்பதே எமது அபிப்பிராயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கென்றொரு பயிற்சி நிலையம்

"எவ்வகையான மரக்கறிச் செடிகளுக்கு எவ்வகையான பசளையை எந்தளவு என்னென்ன நேரத்தில் போடுவதுபோன்ற விபரங்கள் எனக்கு முன்னர் தெரிந்திருக்கவில்லை. தற்போது இது பற்றி அண்ணன்மார்களுக்கும், அம்மாவுக்கும் சொல்லிக் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறேன்."

- பத்மாவதி

"இங்கு வந்து பல விஷயங்களைக் கற்று விட்டேன். பொதுவாக வெங்காயச் செய்கையில் முக்கிய விஷயமொன்றை அறிந்து விட்டேன்." - ஜெயதேவி.

"இங்கு கூட்டெரு தயாரிக்கும் முறை பற்றி அறிந்தேன். எந்தெந்த இரசாயன உரங்களை எவ்வாறான செடிகளுக்கு போடுவது என்பது பற்றியும் அறிந்துள்ளேன்"

- வசந்தாதேவி

"களைநாசினியின் பாவனைபற்றிய அறிவைப் பெற்று விட்டேன். இனிமேல் நாம் கமத்தொழிலில் நஷ்டமடையமாட்டோம்."

- குஞ்சிதமணி

இந்தப் பெண்கள் யார்?

இவர்கள் திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்கள்.

எனக்கு அளித்த பேட்டியொன்றின் போது இப்பெண்கள் மேலே வாசித்த கருத்துக்களை வெளியிட்டனர்.

'கமத்தொழிலில் பெண்கள் பங்கு' என்ற தலைப்பில் கட்டுரை எழுது முகமாக இவர்களைப் பேட்டி கண்டேன். இவர்களது பேட்டி விபரத்தை எழுத முன் இந்நிலையம் பற்றி சில வரிகளைக் குறிப்பிட வேண்டும்.

கடந்த 28 வருடங்களாக பெண்களுக்கு கமத்தொழில் துறையில் பயிற்சி அளித்து வருகிறது திருநெல்வேலியில் அமைந்துள்ள இந்த விவசாயப் பயிற்சி நிலையம் இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை திருநெல்வேலி மகளிர் விவசாய பாடசாலை என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது. இப்பொழுது பெயர் மாற்றம் பெற்றுள்ளதுடன் பயிற்சி நெறியின் காலமும் குறைக்கப்பட்டுவிட்டது. ஏற்கனவே இங்கு ஒரு வருட பயிற்சி அளிக்கப்பட்டது. அதுவும் பெண்களுக்குமட்டும்'. இப்பொழுது ஒரு வாரம், இரு வாரங்கள், ஒரு மாதம், நான்கு மாதங்கள் என்ற அடிப்படையில் பயிற்சிநெறி மேற்கொள்ளப்படுகிறது.

'பெண்களுக்கு மட்டும்' என்று விளங்கிய இந்நிலையத்தில் தற்போது ஆண்களும் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால், ஒரேயொரு பயிற்சி நெறிக்கு — அதுவும் பெண்கள் கலந்துகொள்ளாத பயிற்சிநெறி. 'பம்பை' திருத்துதல், இயக்குதல் போன்றவற்றிலேயேஆண்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஏழு ஏக்கர் நிலத்தில் இப்பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. இங்கு நான் சென்றபோது பெண்களுக்கு நான்கு மாதப்பயிற்சி அளிக்கப் பட்டுக் கொண்டிருந்தது. இன்னும் ஒரு வாரத்தில் அவர்களுக்குரிய பயிற்சிநெறி முடிவடைந்துவிடும்.

முதலில் பயிற்சி நிலையத்தையும், ஆடு மாடு, கோழி வளர்ப்பு மேற்கொள்ளப்படும் இடங்களையும், தோட்டப் பகுதியையும் சுற்றிக் காட்டினார் கடந்த 18 வருடங்களாக இங்கு விரிவுரையாளராகப் பணி புரியும் திருமதி க. தவநேஷ். விவசாயம், பூங்கனியியல் ஆகியவற்றுக்கு இவர்தான் விரிவுரையாளர்.

18 வருடங்கள் பணி புரிந்தவர். நிறைய அனுபவங்களையும், நிறைந்த ஆற்றலையும் பெற்றிருந்தார். இதுவரை எழுநூறுக்குமேற்பட்ட மாணவிகளுக்கு கமத்தொழில் துறையில் பயிற்சி அளித்தவர்.

இம்மாணவிகள் எல்லோரும் தற்போது கமத்தொழில் சார்ந்ததுறைகளில் ஈடுபட்டுள்ளனரா எனக் கேட்டேன்.

சில வருடங்களுக்குமுன் நாங்கள்எடுத்த புள்ளி விபரங்களின்போது 40 - 50 சதவீதப் பெண்கள் கமத்தொழில் சார்ந்த துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அறிந்தோம். இவர்கள் ஒன்றில் விவசாயப்போதனாசிரியர், விவசாயச் சேவையாளர் (கே. வி. எஸ்) ஆகப் பணிபுரிகின்றனர் அல்லது கமத்தொழில், உபஉணவுப்பயிர்ச்செய்கை. வீட்டுத் தோட்டம் ஆகியவற்றை மேற்கொள்கின்றனர் என திருமதி தவநேஷ் குறிப்பிட்டார்.

கமத்தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு இருப்பது இப் பயிற்சி நிலையத்திற்கு பெருமையூட்டக்கூடியதே என மனம் வியக்கிறேன்.

## பயிற்சி நேரம்

திருநெல்வேலி பயிற்சிநிலையத்தில் வருடமொன்றுக்கு இரு நான்கு மாத பயிற்சிநெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எஞ்சிய நான்கு மாதங்களில் அவ்வப்போது குறுகிய கால பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இங்கு கமத்தொழில், கால்நடை, கோழி வளர்ப்பு, மனையியல், தையல் வேலை, கைப்பணி ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நான்குமாத பயிற்சியில் பொதுவான கமத்தொழில் பயிற்சி நெறியும், ஒரு மாத பயிற்சியில் இதே பயிற்சி நெறியும், ஒருவார பயிற்சி நெறியில் வீட்டுத் தோட்ட பயிற்சி நெறியும், இருவார பயிற்சிநெறியில் கைப்பணி, மனையியல் நெறியும் மேற்கொள்ளப்படுகின்றன.

பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு பொருத்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் எல்லோரும்பயிற்சி நிலையத்திலேயே தங்க வேண்டும் என்பது நியதி. வாரத்திற்கு ஐந்தரை நாட்கள் பயிற்சி. சனிக்கிழமை மதியத்திலிருந்து ஞாயிறு மாலை வரை லீவு. சுற்றுப்புறங்களில் இருப்பவர்கள் வீடு செல்கிறார்கள் மற்றவர்கள் இங்கேயே தங்கிவிடுகிறார்கள்.

## பயிற்சிநெறி நேரசூசி

காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி நேரசூசியைக் குறிப்பிடுவதென்றால் காலை 7 மணி முதல் 10 மணி வரை வெளிப்புற செயல் முறைப் பயிற்சி. அதாவது ஆடு, மாடு கோழிகளுக்கு தீன், மருந்து முதலானவை கொடுத்தல். தோட்டத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகள். 10 மணியிலிருந்து 10.30 மணிவரை தேநீர் இடைவேளை. 10.30 மணியிலிருந்து 12 மணி வரை உள்ளக செயல் முறைப் பயிற்சி. மனையியல், தையல் வேலை, கைப்பணி ஆகியவற்றில் ஈடுபடுதல்.

12 மணியிலிருந்து 1.30 மணிவரைமதிய இடைவேளை. 1.30 மணியிலிருந்து 2.30மணி வரை வெளிப்புற செயல் முறைப் பயிற்சியும் உள்ளக செயல் முறைப் பயிற்சியும் அளிக்கப்படும். 2.30 — 3.00 தேநீர் இடைவேளை. 3.00—4.00 விரிவுரைகள். 4.00 — 6.00 பொழுதுபோக்கு.



படத்தில் இடமிருந்து வலமாக: குஞ்சிதமணி, திருமதி. சிவராஜா, வசந்தாதேவி. பத்மாவதி ஆகியோர் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவிகள் வாரத்தில் ஒரு தடவை இங்குள்ள நூலகத்தில் 2 மணி நேரத்தைக் கழிக்க வேண்டும். இது கட்டாயம்.

மாணவிகளுக்கு அரசாங்கம் நாளொன்றுக்கு 5 ரூபா வேதனமாகக் கொடுக்கிறது. இப்பணம் அவர்களது சாப்பாட்டிற்கு நிலையத்தினரால் அறவிடப்படுகிறது.

ஏற்கனவே ஹன்வெலை-ஹல்கஸ்ஹேனையில் உள்ள நல்லாயன் மகளிர் பண்ணையில் பெண்களே கால்நடை, கோழி வளர்ப்பிலும், தோட்டச் செய்கையிலும் நேரடியாக ஈடுபடுகிறார்கள் என்று ஏற்கனவே எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால்; திருநெல்வேலி பயிற்சி நிலையத்தில் மாணவிகள் 'மறைமுகமாகவே' ஈடுபடுகிறார்கள். அதாவது, இவற்றினை மேற்கொள்வதற்கு போதிய கூலியாட்கள் உள்ளனர். வெளிப்புற செயல்முறைப் பயிற்சி நேரத்தின்போது இக்கூலியாட்களுக்கு உதவுவதன் மூலமே வெளிப்புற செயல்முறை பயிற்சியை இம்மாணவிகள் பெறுகிறார்கள். எனினும், மாணவிகள் அரைஏக்கர் நிலத்தில் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுகிறார்கள்.

இங்கு முட்டையிடும் கோழிகள் 400, இனப் பெருக்கத்திற்கு மட்டும் வளர்க்கப்படும் ஆடுகள் 17, கன்றுகள், எருதுகள், பசுக்கள் எல்லாமாக 51 மாடுகளும் உள்ளன. அத்துடன் சுமார் 5 ஏக்கர் நிலத்தில் மரக்கறிச் செய்கையும், உப உணவுச் செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றன. கோழி முட்டைகள் பெரும்பாலும் குஞ்சு பொரிப்பதற்கு எடுக்கப்படுவதுடன், எஞ்சியவையே விற்கப்படுகின்றன. இத்துடன் நாட்குஞ்சுகளும் இங்கு விற்பனையாகின்றன.

இனி ஆச்சரியமான தகவலைக் குறிப்பிடுகிறேன். பால், முட்டை, கோழிக்குஞ்சு, மரக்கறி, உப உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் மூலம் வருடமொன்றுக்கு சுமார் 4 லட்சம் ரூபாய் வருமானமாகக் கிடைக்கிறது. மாதமொன்றுக்கு சராசரி வருமானம் 25 ஆயிரம் ரூபா. ஆச்சரியமான தகவல் தானே?

## சான்றிதழ்

பயிற்சி நெறிகள் முடிவடைந்தபின் பரீட்சையொன்று நடத்தப்படும். அதில் சித்திபெறும் மாணவிகளுக்குச்சான்றிதழ்கள் வழங்கப்படும். பொதுவாக எல்லா மாணவிகளுமே இப்பரீட்சையில் சித்தி பெறுகிறார்கள்.

மாணவிகள் பயிற்சி நிலையத்திற்கு வந்தார்கள். பயிற்சியை மேற்கொண்டு பரீட்சையில் சித்தி பெற்று சான்றிதழும் பெற்றார்கள். அதன் பின் வீடு செல்கிறார்கள்.

இங்கு மேற்கொண்ட பயிற்சியினால் இவர்களுக்கு என்ன லாபம்? நன்மை?

இதற்கு விடை அளிக்கிறார்கள் எனக்கு பேட்டியை அளித்த நான்கு மாணவிகள். அவர்களது பதில்களில் பயிற்சியில் கிட்டிய நன்மைகள் என்ன என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

தற்போது மொத்தமாக 53 மாணவிகள் இங்கு பயிற்சி பெறுகிறார்கள். இவர்களில் மொத்தம் நான்கு பேரைத் தேர்ந்தெடுத்தேன். இதில் இருவர் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அடுத்தடுத்த வீடுகளில் இருப்பவர்கள்.

இவர்களது விபரங்களைத் தருகிறேன்:- செல்வி குஞ்சிதமணி பசுபதி- மல்லாகம். வயது: 21. செல்வி வசந்தாதேவி பேச்சிமுத்து- அன்பு வழிபுரம் (திருகோணமலை). வயது: 22 திருமதி ஜே. சிவராஜா-புத்தூர். வயது: 25. செல்வி பத்மாவதி மாப்பாணர்-புத்தூர். வயது: 25.

இவர்கள் யாவரும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது இவர்களது பெற்றோர் அல்லது சகோதரர்கள் கமத்தொழிலையே செய்கின்றனர். பெண்களும் வீட்டுத்தோட்டம், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு ஆகியவற்றில் செயல்முறை அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். நால்வருமே க. பொ. த. உயர்தரம் சித்தி பெற்றிருக்கிறார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பல்கலைக் கழகத்தில் காலடி எடுத்துவைக்க முடியவில்லை.

படித்த இவர்கள்தமதுபெற்றோருக்கோ, சகோதரர்களுக்கோ கமத்தொழிலில் உதவி புரிந்து வருகிறார்கள். எனவே, கமத்தொழில் என்றால் என்ன என்று இவர்களுக்குத் தெரியும்.

மண்வெட்டிபிடித்திருக்கிறார்கள்: நாற்றுமேடை அமைத்திருக்கிறார்கள்; செடிகளுக்கு நீர் ஊற்றியிருக்கிறார்கள்; பாத்திகட்டியிருக்கிறார்கள்; களை பிடுங்கியிருக்கிறார்கள்.

இவ்வாறு எல்லாம் அனுபவ ரீதியில் கமத்தொழில் அறிவு இருந்தும் இவர்கள் ஏன் திருநெல்வேலிப் பக்கம் எட்டிப் பார்த்தார்கள்?

"கமத்தொழில்பற்றி எமக்குத் தெரியும்; ஆனால், அதை சரிவர பின்பற்றுவது பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மைச் சம்பவம்.**

# சிரிப்பொலி

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உயர் பட்டங்களுக்கான கமத்தொழிற் கல்வி நிறுவகத்தின் மாணவர்களுக்கான 'மண் பாதுகாப்பு'க்கான வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவ்வகுப்பின் இடைத்தவணைப் பரீட்சைக்கான திருத்தப்பட்ட விடைத்தாள்களை விரிவுரையாளர் அதற்குரிய மாணவனிடன் கொடுத்துக் கொண்டு வந்தார்.

ஒரு மாணவனிடம் விரிவுரையாளர் விடைத்தாளை கையளிக்கும் பொழுது 'நான் மாட்டைப் பற்றி எழுதச்சொன்னால் மாடு தென்னை மரத்தில் கட்டப் பட்டுள்ளது என்று எழுதிவிட்டு தென்னை மரத்தைப் பற்றி எழுதினால் எப்படியிருக்குமோ அதுபோல் எனது கேள்விக்கு உமது பதில் இருக்கின்றது' என்றார்.

உடனடியாக வகுப்பில் எழுந்த சிரிப்பொலி அடங்க வெகு நேரமாயிற்று.

— மகிந்தன்.

எமக்கு அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. எவ்வாறு பயிர்களை நடுவது எப்போது உரமிடுவது; களை பிடுங்குவது; என்ன வகையான உரத்தை, கிருமிநாசினியைபாவிப்பது பற்றி எமக்குச் சரிவர தெரிந்திருக்கவில்லை. இதுபற்றி அறியவே - எமது அறிவைமேலும் அதிகரிக்கவே நாம் இங்கு வந்தோம்''-இது அவர்களின் ஏகோபித்த பதில்.

இவர்களது நோக்கம் நிறைவேறியதா? ஆம் என்றுதான் கூறவேண்டும்.

''முன்னரெல்லாம் எவ்வகையான மரக்கறிச் செடிகளுக்கு எவ்வகையான பசளையைப் போடுவது; எந்தளவு; என்னென்ன நேரத்தில் போடுவது போன்ற விபரங்கள் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. தற்போது இது பற்றி என் அண்ணன்மார்களுக்கும், அம்மாவுக்கும் சொல்லிக் கொடுக்கக்கூடிய நிலையில் உள்ளேன்'' என்று சொன்னார் பத்மாவதி.

இவர் தனது அண்ணன்மார்களுக்கும் அம்மாவுக்கும் கமத் தொழிலில் உதவி செய்து வருகிறார். ஒரு பரப்பு காணியில் பீட்ரூட், வெங்காயம், குரக்கன், கீரை போன்றவற்றை இவர்கள் செய்கை பண்ணுகிறார்கள்.

'ஏ. எல்.' படித்திருந்தும் தொழில்செய்ய விருப்பமில்லையா எனக் கேட்டபோது, ''இல்லை, கமத்தொழிலையே செய்ய விரும்புகிறேன். திருமணம் செய்தாலும் இதனைத் தொடர்வேன்'' என்றார் மிக அடக்கமாக, ஆனால் உறுதியுடன்.

திருமணமான ஜெயதேவியும் 'ஏ.எல்.' படித்து சித்தி எய்தியவர். பல்கலைக் கழகம் போக முடியாததினால் வேலைக்கு போகமுயற்சித்தார். வேலை கிடைக்கவில்லை. இப்போது அவர் மனோநிலையோவேறு. வேலைக்குப்போவதில்லை என முடிவு. திருமணமாகிவிட்டது, ஒரு காரணம்; கமத்தொழிலில் அக்கறை- வீட்டுக்கு அண்மையிலேயே கமத்தொழிலில் ஈடுபட்டு வருவாயைப்பெருக்கலாம் என்பது மற்றொரு காரணம்.

பயிற்சிநெறிபற்றிய இவர்கருத்துஎன்ன?

''இங்கு வந்து பல விஷயங்களைக் கற்று விட்டேன். பொதுவாக வெங்காயச் செய்கையில் முக்கிய விஷயமொன்றை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டேன். நாங்கள் எல்லாம் வெங்காயத்தை மிகவும் நெருக்கமாகத்தான் நடுவோம். அப்படி நட்டால் விளைச்சல் அதிகரிக்கும் என நம்பினேம். ஆனல், இங்கு வந்த பின்தான் எமது எண்ணம் தவறு என்பது புரிந்தது. உண்மையில் வெங்காயத்தை ஐதாக நடவேண்டும். அப்பொழுதுதான் விளைச்சல் அதிகரிக்கும். எமது தவருனநோக்கத்தினல் கடந்த காலங்களில் பொருளாதார ரீதியில் எவ்வளவு நஷ்டத்தை அடைந்திருப்போம். பயிற்சி பெற்றதினல் கிடைத்த நன்மை இதுவாகும்.''

இவரது வீட்டுக்கு அண்மையில் இரண்டு பரப்புக் காணியில் கீரை, மரவள்ளி, வெங்காயம் போன்றவற்றை இவர் அண்ணன் செய்கை பண்ணுகிருர். அண்ணனுக்குத் தங்கை உதவி.

## கூட்டெரு தயாரிக்கும் முறை

வசந்தாதேவி என்ன சொல்கிருர்?

'ஏ. எல்.' படித்துவிட்டு சும்மா இருந்தேன். விவசாயத்துறை சம்பந்தமான வேலை செய்வதில் எனக்கு நாட்டம். ஆனல், அவ்வாருன ஒரு வேலையைச் செய்ய முன் அது பற்றிய பயிற்சியை மேற்கொள்ள விரும்பினேன். அதனல் திருகோணமலையில்இருந்து திருநெல்வேலிக்கு வந்தேன்.'

வசந்தாதேவியின் குடும்பத்தினரும் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எட்டுப் பரப்புக் காணியில் மா, பலா, தென்னை, வாழை, கத்தரி போன்றவற்றை விளைவிக்கிருர்கள்.

பயிற்சிநெறியில் இருந்து இவர் கற்ற பாடம் என்ன?

''கூட்டெரு தயாரிக்கும் முறை பற்றி அறிந்தேன். எந்தெந்த இரசாயன உரங்களை எவ்வாருன செடிகளுக்கு போடுவது என்பது பற்றியும் அறிந்துள்ளேன். சொல்லப்போனல் உரப்பாவனை பற்றி துலாம்பரமாக அறிந்து விட்டேன்.''

களைநாசினி, கிருமிநாசினி பிரயோகம் குறித்து அண்ணனுக்கே உபதேசம் செய்யக் கூடிய ஒரு நிலையை அடைந்துவிட்டார் குஞ்சிதமணி. உண்மைதான்!

''ஏ. எல். சித்தி. பல்கலைக் கழக அனுமதி கிடைக்கவில்லை. வேலையும் கிடைக்கவில்லை. தோட்டத்தில் அண்ணனுக்கு உதவி செய்தேன். நாம் பீட்ரூட், வெங்காயம், பொன்னங்கண்ணி போன்றவற்றை விளைவிக்கிறேம். கிருமிகளின் தாக்கம் இருந்தால் 'மலத்தியனைத்தான்' பாவிப்போம், இக்கிருமிநாசினி எல்லாக் கிருமிகளையும் கொன்றுவிடக்கூடிய சக்தி இல்லாவிட்டாலும் அதனைத்தான் பாவித்தோம். இதனல் நாம் சிலவேளைகளில் நஷ்டத்தையும் அடைந்துள்ளோம். இப்போது நான்தான் களைநாசினி, கிருமிநாசினி பாவனை பற்றிய அறிவைப் பெற்றுவிட்டேனே. இனிமேல் கமத்தொழிலில் நஷ்டமடைய மாட்டோம்.''

எல்லோருமே ஒட்டுமொத்தமாக தாம் இப்பயிற்சி நெறியை மேற்கொண்டதால் அறிவு பூர்வமான பல தகவல்களை அறிந்துவிட்டதாக பெருமையுடன் கூறினர்கள்.

கமத்தொழில் பற்றிய அறிவை மட்டும் தாம் பெறவில்லை என எல்லோருமே ஒரே குரலில் தெரிவித்தனர்.

ஆடு, மாடு, கோழி வளர்ப்பு பற்றியும் பயிற்சி பெற்றதாக கூறினர். இவற்றுக்கு வரும் நோய்கள், நோய்களைப் போக்குவதற்கு பாவிக்கும் மருந்துகள் போன்றவை குறித்தும் அறிந்து விட்டார்கள்.

இது மட்டுமா?

கைப்பணி, மனையியல், கைவேலை போன்றவற்றிலும் பயிற்சி பெற்றுவிட்டார்கள்.

சீலையும் பஞ்சும் உபயோகித்து பொம்மைகள் அமைத்தல், நைலோன் கயிறுகளைப் பாவித்து 'தொங்குத் தட்டுக்களை' அமைத்தல், தும்புக்கட்டைகளை அமைத்தல் மற்றும் விதம் விதமான அலங்காரப் பொருட்களை அமைத்தல் போன்றவற்றில் இவர்கள் தேர்ச்சி பெற்று விட்டார்கள். தையல் பூவேலைபோன்றவற்றிலும் ஓரளவு கைதேர்ந்தவர்களாகி விட்டார்கள்.

ஆக, இவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் கமத்தொழில் மற்றும் கைப்பணி, கைவேலை, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு போன்றவற்றில் தனித்து கருமம் ஆற்றக்கூடிய பக்குவத்தைப் பெற்றுவிட்டார்கள். இவர்களின் எதிர்காலப்பணி நாட்டின் சுபீட்சத்திற்கு வழி கோலும் என்பது நிச்சயம். கமத்தொழிலில் பெண்கள் செய்யக்கூடிய ஆக்கபூர்வமான பணிகளுக்கு இத்தகையவர்கள் ஓர் எடுத்துக்காட்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கென்று தனியான பாடசாலைகள்
பெண்களுக்கென்று தனியான சங்கங்கள்
பெண்களுக்கென்று தனியான பயிற்சிகள்

இப்படி பெண்களுக்கென்று தனியான பாடசாலைகள், சங்கங்கள், பயிற்சிகள் இருக்கும்போது குடியேற்றத்திட்டமொன்று இருந்தால் ஆச்சரியமான விடயமா? இல்லவேயில்லை.

கிளிநொச்சியை அடுத்துள்ள திருவையாற்றில் படித்த மகளிருக்கென குடியேற்றத் திட்டமொன்றுள்ளது. வட பகுதியில் பெண்களுக்கென்று உள்ள ஒரேயொரு குடியேற்றத் திட்டம் இதுவென்று கூறப்பட்டது.

திருவையாறு படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் 1976ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

குடியேற்றத் திட்டத்தில் காணியை வழங்கியிருந்த அரசாங்கம் காடு அழிப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு 450ரூபாவும், கட்டை பிடுங்குவதற்கு, ஏக்கருக்கு 525ரூபாவும், தற்காலிக குடிசை கொட்டில் அமைப்பதற்கு 75ரூபாவும் வழங்கியது. அத்துடன் சாதாரண கிணறு தோண்டுவதற்கு 100ரூபாவும், உணவு உற்பத்திக்கான கிணறு தோண்டுவதற்கு 2800ரூபாவும் வழங்குவதாக அரசாங்கம் உறுதி அளித்தது. இவ்வளவு உதவிகளும் அளிக்கப்படும்போது அவர்களது உற்சாகத்திற்கு குறையிருக்குமா?

காடு களனியாகியது. இத்தருணத்தில் தான் இரணைமடுவில் இருந்து நீரை இக்குடியேற்றத் திட்டத்திற்கு வழங்க முடியாத நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. நீரின்றிக் கமத்தொழிலைத் திருப்திகரமாக மேற்கொள்ள முடியாது.

# திருவையாறு

# படித்த மகளிர் குடியேற்றத் திட்டம்

அச்சமயத்தில் இத்திட்டத்திற்கென 270 படித்த பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனாலும் 176 பேருக்கே ஒன்றரை ஏக்கர் காணி வீதம் அளிக்கப்பட்டது. இந்த 176 பேரும் ஒன்றில் விவசாயப் பாடசாலையில் 'டிப்ளோமா' பெற்றவர்களாக இருந்தார்கள்; அன்றேல் விவசாயப் பாடசாலையில் கமத்தொழில் சார்ந்த பயிற்சி பெற்றவர்களாக விளங்கினார்கள். சுருங்கச் சொன்னால் எல்லோருமே கமத்தொழிற் துறையில் அனுபவம் உள்ளவர்களாகத் திகழ்ந்தார்கள்.

இக்குடியேற்றத் திட்டத்திற்கு இரணைமடுக் குளத்திலிருந்து நீரை ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் பெற்று வழங்குவது என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனவே, நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பெண்கள் தமக்கு அளிக்கப்பட்ட பகுதியில் இருந்த காடுகளை அழித்து களனிகளாக்கிக் கொண்டிருந்தனர்.

வானம் பார்த்த பூமியில் உப உணவுச் செய்கையை மேற்கொள்ள முடியுமா?

பலன்: பெண்கள் குடியேற்றத் திட்டத்தை விட்டு வெளியேறினார்கள்.

அதன் பின் ஒவ்வொரு வருடமும் குடியேற்றத் திட்டத்தில் ஆலோசனைக் கூட்டங்கள் நடந்தன. ஆனால், உருப்படியான திட்டங்கள் எதுவுமே உருவாகவில்லை. ஆண்டுகள் கழிந்தன. களனியாகிய காணிகள் காடுகளாகின.

1981 செப்டெம்பர்—அக்டோபர் காலப் பகுதியில்தான் புதியதொரு திட்டம் அரசாங்கத்தினால் வகுக்கப்பட்டது. குடியேற்றத் திட்டத்திற்கு குழாய்க் கிணறுகள் மூலம் நீர் வழங்குவதுதான் அத்திட்டம். இது குறித்து நீர் வளச் சபையின் ஆலோசனை கோரப்பட்டது. சபை அங்கு ஆய்வுகளை மேற்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாய்க் கிணறுகளின் மூலம் குடியேற்றத் திட்டத்தின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என ஆய்வுகளின் மூலம் அறிய முடிந்தது.

நீர் வளச்சபை மொத்தமாக ஒன்பது குழாய்க் கிணறுகளை நிருமாணித்தது.

ஒவ்வொன்றும் சுமார் 100அடி ஆழம் கொண்டது.

நீர் பீறிட்டுக் கொண்டு பாய்ந்தோடியது. ஒவ்வொரு குழாய்க் கிணறும் நிமிடமொன்றுக்கு 150 கலன் நீரைப் பாய்ச்ச வல்லது.

குடியேற்றத் திட்டத்தில் நீர் தாராளமாகக் கிடைக்கிறது என்ற செய்தி கேட்டதும் பெண்கள் திட்டத்திற்கு திரும்பத் தொடங்கினர். ஒன்பது குழாய்க் கிணறுகளை நிருமாணித்த சபை அங்கு அமைக்கப்பட்டுள்ள ஒன்பது குழுக்களுக்கும் வழங்கியது. ஒவ்வொரு குழுவிலும் பத்துப் பேர் அங்கம் வகிக்கிறார்கள். ஆனால், குழுவில் அங்கம் வகிப்பவர்களிடம் இருந்து நீர்ப்பாசன வாய்க்காலுக்கென 5000 ரூபாவும், நீர் இறைக்கும் 'பம்பை' இயக்குவதற்கு மாதமொன்றுக்கு 500ரூபாவும் அறவிடப்பட்டது. ஆனால், முதல் நான்கு குழுக்களுக்கும் சபை இலவசமாகக் குழாய்க் கிணறுகளை வழங்கியுள்ளது, இதில் முதல் இரு குழுக்களுக்கு குழாய்க் கிணறு இலவசமாகக் கிடைத்துள்ள அதே வேளை 'பம்பும்' இலவசமாகக் கிடைத்துள்ளது. எனவே, மூன்றாம், நான்காம் குழுக்கள் தமது செலவிலேயே 'பம்பை' வாங்க வேண்டும். ஏனைய குழுக்கள் குழாய்க் கிணறுக்கும், 'பம்பு'க்கும் தாமே செலவளிக்க வேண்டும்.

எது எப்படியிருந்த போதிலும் தம்மால் கைவிடப்பட்ட நிலத்தினை பொன் கொழிக்கும் பூமியாக மாற்றும் எண்ணத்தில் பெண்கள் குடியேற்றத் திட்டத்திற்கு வருகை தருகிறார்கள்.

அவர்கள் மிளகாய், வெங்காயம் மற்றும் மரக்கறி வகைகளை ஒரு முறை பயிரிட்டு விட்டார்கள். இப்பயிர்ச் செய்கையின் மூலம் அவர்களுக்குப் போதிய லாபம் கிட்டாவிட்டாலும் காணியை விட்டுப் போகத் தேவையில்லை. எதிர்காலத்தில் இப்பூமியில் இருந்து நிறையப் பலனைப் பெறலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.



திருமதி. மரியதாஸன்

பெண்கள் குடியேற்றத் திட்டத்திற்கு திரும்புகிறார்கள் என்று நான் குறிப்பிடுகிற போதிலும் உண்மையில் அவர்கள் அங்கு தங்கி பயிர்ச் செய்கையில் ஈடுபடுகிறார்களா என்று கேட்டால் இல்லை என்றுதான் கூறுவேன். ஏனெனில் காணிக்கு திரும்பும் பெண்கள் வேறு ஆட்களின் உதவியுடன் தான் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் பலர் குடியேற்றத் திட்டத்தில் தங்குவதில்லை. தமது காணியில் ஒரு குடும்பத்தை நிறுத்தி விட்டு இவர்கள் தமது சொந்த ஊரிலேயே தங்கி இருக்கிறார்கள். இடைக்கிடை காணியை எட்டிப் பார்ப்பார்கள். வேறு சிலர் காணிக்கு வருவதில்லை. காணியைக் குத்தகைக்கு கொடுத்துவிட்டு இருக்கிறார்கள். ஒரு சிலரே அங்கு தங்கியிருந்து பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

இதற்கான காரணங்கள் — யானைப்பயம், தனியாக இருக்கப்பயம், நுளம்புக்கடி போன்ற பலவற்றைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையும் பெண்களும்

நமது நாட்டின் 14,850,001 பேரைக் கொண்ட சனத்தொகையில் பெண்கள் - 7,310,873 ஆண்கள் - 7,539,128.

மொத்தமாகவுள்ள 24 மாவட்டங்களுள் 6 மாவட்டங்களில் பெண்களின் தொகை ஆண்களின் தொகையைவிட அதிகமாகும். அம்மாவட்டங்கள் வருமாறு:- யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, கேகாலை.

படித்த பெண்கள் அல்லவா? தமது பிள்ளைகளும் நன்ருகப் படிக்க வேண்டும் என்று விரும்புவார்கள்தானே? அப்படியாயின் திருவையாறு போன்ற இடத்தில் இருந்துகொண்டு எப்படி பிள்ளைகளை படிப்பிப்பது?

இப்படி பல சமூக பொருளாதார பிரச்சினைகள் இருப்பதனல் அவர்கள் அங்கு தங்கி இருந்து கமத்தொழிலில் ஈடுபடமுடியாதிருக்கின்றது.

எனவே, நான் நீர் வளச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்துப் பொறியியலாளரான திரு. ஏ. மகேந்திரனுடனும், அவரது உதவியாளர் திரு. சத்தியேந்திராவுடனும் அங்கு சென்றபோது ஒரேயொரு பெண்ணைத்தான் காண முடிந்தது.

அவர் ஐந்து பிள்ளைகளின் தாய். கணவர் யாழ்ப்பாணத்தில் பணிபுரிகிருர். ஆனல், இப்பெண் மனத் துணிச்சலுடன் திருவையாறில் தங்கி உப உணவுச் செய்கையில் ஈடுபட்டுள்ளார். இப்பெண்ணுக்குப் பெயர் திருமதி அகத்தம்மா மரியதாசன். வயது 35. யாழ். கச்சேரியடி, நெடுந்தீவு பிறப்பிடம். அங்குள்ள ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் க.பொ த. (சாதாரணம்) வரை படித்தவர். படித்த பின் திருநெல்வேலி மகளிர் விவசாயப் பாடசாலையில் ஒரு வருடப் பயிற்சி பெற்றவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அதனல் விவசாயத்தில் நிறைய ஆர்வம் இருக்கிறது.

திருவையாறு திட்டத்திற்கு பெண்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டபோது இவருக்குத்திருமணமாகி இருந்தது. எனினும், இவர் விண்ணப்பித்தார். இவருக்குக் காணி கிடைத்தது. காணிக்கு வந்தார். காட்டை அழித்தார். கட்டைகளைப் பிடுங்கினர். ஆனல், நீர் கிடைக்காமல் போகவே காணியை விட்டுவிட்டுப் போய்விட்டார்.

இப்போது நீர் கிடைக்கவே அவர் காணிக்கு திரும்பிவந்து மீண்டும் காடாகி இருந்த நிலத்தை துப்பரவு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளார். இவர் தனது காணியில் மிளகாய், வெங்காயம், மரவள்ளி, வெண்டி, கத்தரி போன்றவற்றை பயிரிட்டார்.

முதலாவது விளைச்சல் எப்படி என்று கேட்டோம்.

''விளைச்சல் பரவாயில்லை. ஆனல் மிளகாய் விஷயத்தில் ஏமாந்து விட்டேன்'' என்ருர் அழாக்குறையாக.

''ஏன்'' என்று கேட்டோம்.

''புதிய ரக மிளகாயை செய்கை பண்ணினேன். இது சற்று சிறியது. இதனல் இதனை மிகவும் மலிவாகவே வாங்குகிருர்கள். இதனல் எனக்கு ஆயிரக்கணக்கில் நஷ்டம்.''

அகத்தம்மா சொல்வதில் உண்மை அடங்கியிருந்தது. ஏனெனில் அவரிடமிருந்து ஒரு கிலோ செத்தல் மிளகாயை தனிப்பட்ட வியாபாரிகள் 17 ரூபாவுக்கே வாங்குகிருர்களாம். ஆனல் கீழ் மட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலையை அரசாங்கம் 21 ரூபாவாக நிர்ணயித்திருக்கிறதே!

நஷ்டம் ஏற்பட்டாலும் அகத்தம்மா மனம் தளரவில்லை.

"இனியும் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவேன். எனக்கு நிறைந்த லாபம் கிட்டும், என்ற நம்பிக்கை இருக்கிறது" என்றார், உறுதியாக.

நம்பிக்கைதானே வாழ்க்கையின் அத்திவாரம்?

நீர் கிடைப்பதில் ஏதும் பிரச்சினை உண்டா எனக் கேட்டேன்.

இல்லை என்றார். ஆனால் தனது காணியின் பகுதியினூடாகத்தான் தனக்கு நீர் வழங்க வேண்டும் என்றும், ஆனால் முன் பக்கத்தால் தருவதால் பின் பகுதியில் உள்ள மேட்டுப் பகுதிக்கு நீர் செல்லாததினால் அரை ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ண முடியாதிருக்கிறது என்றும் கூறினார். அவரது குறை விரைவில் நிவர்த்தி செய்யப்படுமென்று அதிகாரிகளினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

இக்குடியேற்றத் திட்டத்தைப் பற்றி அகத்தம்மா என்ன சொல்கிறார்?

"இது நல்லதொரு குடியேற்றத் திட்டம். ஆனால், பெண்கள் எல்லோரும் இங்கு தங்கி விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. எல்லாப் பெண்களுமே இங்கு தங்கி விவசாயத்தில் ஈடுபட்டால் எல்லோரும் உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் கருமமாற்றலாம்"-இப்படி அவர் சொன்னார்.

"ஒரு முறை மேற்கொண்ட பயிர்ச் செய்கையின் மூலம் பல பாடங்களைக்கற்றுக் கொண்டுவிட்டேன். இனிவரும் காலங்களில் தவறுகளை நிவர்த்தி செய்ய முடியும்."

அகத்தம்மா இறுதியாகக் கூறிய வார்த்தைகள் இப்பொழுதும் என் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன.

---

அறிவுக்கு விருந்து

## மன்னார் மாவட்டம் பற்றி . . .

இலங்கையில் உள்ள 24 மாவட்டங்களில் மன்னார் மாவட்டம் சனத் தொகையில் 22வது இடத்தை வகிக்கிறது. 1981ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில் சனத்தொகை 106,940 ஆகும். இலங்கையின் சனத்தொகையோ 1,48,50001. இதன் பரப்பளவு 2002.1ச.கி.மி.

மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் ஆண்களின் தொகை - 56,983, பெண் களின் தொகை - 49,957.

பௌத்தர் - 3,224, இந்துக்கள் - 28,500, முஸ்லிம்கள் - 30,079, கத் தோலிக்கர்கள் - 44,003, கிறீஸ்தவர்கள் - 995, ஏனையோர் - 139.

சிங்களவர் - 8,710, இலங்கைத் தமிழர் - 54,106, இந்தியத் தமிழர்-14,072, இலங்கைச் சோனகர் - 28,464, பறங்கியர் - 41, மலாயர் - 23, ஏனையோர்-1524.

முக்கிய பயிர்ச்செய்கை நெல், நிலக்கடலை, உப உணவுப் பொருட்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஷாக்கிலும் உணவுற்பத்தியிலும் பெண்களின் பங்கு

பாரம்பரியமாக ஒரு குடும்பத்தில் உணவு தயாரிப்பதில் பெரும்பாலும் பெண்களே ஈடுபடுகின்றனர். குழந்தைகள், வளர்ந்த பிள்ளைகள், கணவன், பெற்றோர் என பல் வேறுபட்ட வயதுடையவர்கட்கு பெண்களே விதம் விதமான உணவு வகைகளை தயாரிக்கிறார்கள். இதைவிட நோய்வாய்ப்பட்ட குடும்ப அங்கத்தினர்களுக்கும் தேவைக் கேற்ப விசேட உணவுகளைத் தயாரிப்பது பெண்களையே சார்ந்தது. எனவே, பெண்கள் உணவு, போஷாக்கு என்பன பற்றிய அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

பெறுமதியான உணவுவகைகள் தவறான தயாரிப்பு முறைகளால் பூரண சத்துக்களை இழக்கின்றன. நீரில் அதிக நேரம் கொதிக்க வைத்தல், அதி உயர்ந்த வெப்பநிலைக்குஉட்படுத்தல் போன்ற முறைகள் இயலுமான அளவு தவிர்க்கப்படவேண்டும். குடும்ப பெண்களுக்கு உயிர்ச்சத்து பற்றிய அடிப்படை அறிவு நன்மை பயக்கும். எனவே இதனைச் சற்றுக் கவனிப்போம்.

உயிர்ச்சத்துக்கள் ஏ, பீ, சீ, டி, ஈ, கே எனப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பீ, சீ என்பன நீரிலும் ஏ, டி, ஈ, கே என்பன கொழுப்பிலும் கரையக் கூடியன. உயிர்ச்சத்து 'ஏ' கண், தோல்ஆகியவற்றின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததாகும். இது பால், வெண்ணெய், தயிர், முட்டை மஞ்சட்கரு, கீரை வகைகளில் அதிகம் காணப்படுகின்றது. உயிர்ச்சத்து 'ஏ' கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் கூடிய அளவில் தேவைப்படுகின்றது. சாதாரண சமையல் முறைகளால் இந்த உயிர்ச்சத்து அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

உயிர்ச்சத்து 'பீ' தவிடு, தானிய வகைகள், நிலக் கடலை ஆகியவற்றில் போதிய அளவு காணப்படுகிறது. இது நரம்பு விருத்திக்கு இன்றியமையாததாகும். உயிர்ச்சத்து 'சீ' மரக்கறி, இலைவகைகளிலும், பழங்களிலும் கணிசமான அளவு காணப்படுகின்றது. நெல்லிக்காயிலும், முளைக்க வைத்த பாசிப் பயிற்றிலும் உயிர்சத்து 'சீ' கூடியளவில் காணப்படுகின்றது. சூடாக்குவதாலும் அல்லது மரக்கறி பழவகைகளை உலர விடுவதாலும் பெருமளவு உயிர்ச்சத்து சீ' அழிக்கப்படுகின்றது உயிர்ச்சத்து 'டி' யானது ஈரல், முட்டை மஞ்சள்கரு, பால், வெண்ணெய் என்பனவற்றில் பெருமளவு காணப்படுகின்றது. கருவுற்றிருக்கும் பெண்களுக்கு இவ்வுயிர்ச்சத்தானது பெருமளவில் தேவைப்படுகின்றது. 'ஈ', 'கே' என்பன புத்தம் புது இலைக்கறி, மரக்கறி வகைகளில்தேவையான அளவு காணப்படுகின்றன.

சாதாரண சமையல் முறைகளில் கொதிக்க வைத்தல், ஆவியில் அவித்தல் என்னும் இரு முறைகளும், பொரித்தல், வறுத்தல், வேக வைத்தல் என்னும் உலர் முறைகளும் கையாளப்படுகின்றன. மேற்கூறிய முறைகளால் புரதம், கொழுப்பு, மாப்பொருள் என்பன வற்றில் அதிக இழப்பு ஏற்படுவதில்லை. மரக்கறி வகைகளை உப்புச் சேர்த்து அவித்து,

—திருமதி. சசிகலா சபாரட்னம்—
(ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர்)

வரும் நீரை வெளியேற்றுவதால் முக்கியமான கனியுப்புக்கள் வெளியேற்றப்படுகின்றன. எனவே. மரக்கறிவகைகளைக் குறைந்த அளவு நீரில் மூடி அவிப்பதுடன் நீரை வெளியேற்றுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆவியில் அவிப்பதாலும் உயிர்ச் சத்துக்களின் இழப்பு குறைக்கப்படுகின்றது. அரிசியிலுள்ள உயிர்ச்சத்துக்களில் பெருமளவு நீரில் பல தடவை கழுவுவதாலும், கொதிக்க வைத்து கஞ்சியை வெளியேற்றுவதாலும் இழக்கப்படுகின்றன. எனவே, ஓரிருமுறை தாமதிக்காது கழுவுவதும், கஞ்சி வடிக்காமல் போதியளவு நீரில் அவிப்பதும் சிறந்த முறைகளாகும் மேற்கூறியவற்றைமனதில்கொண்டு பெண்கள் உயிர்ச்சத்துக்களின் தேவையற்ற இழப்பைத் தவிர்க்கலாம்.

## உணவுப் பங்கீடு

நாளாந்த உணவு வகைகளை வீட்டுத் தோட்டங்களிலோ சந்தைகளிலோ சேகரிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது, பதப்படுத்துவது, குடும்ப அங்கத்தினர் மத்தியில் பங்கிடுவது என்பனவும் பெண்களால் செய்யப்படும் சாதாரண காரியங்களாகும். சாதாரண சோறுடன் உழுந்து, பயிறு வகைகள், இலை வகைககள், மரக்கறி, பழங்கள் என்பவற்றைச் சேர்ப்பதால் உடலிற்குத் தேவையான சக்தி மற்றும் புரதம், உயிர்ச் சத்துக்கள், அமினோஅமிலங்கள் என்பன கிடைக்கின்றன. பெண்கள் சில குறிப்பிட்ட உயிர்ச்சத்துள்ள பொருட்களை வாங்குவதால் சந்தையில் அவற்றின் தேவையை அதிகரிப்பதன் மூலம் நாட்டில் அவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வழிவகுக்கலாம்.

நாளாந்த உணவில் தீட்டிய அரிசி, மா என்பனவற்றை மட்டும் முக்கியமாகவும் பெருமளவிலும் உட்கொள்ளாமல் மலிவான சத்துக்கூடிய பொருட்களைச் சரிக்குச்சரி சேர்த்துக் கொள்ளலாம். உழுந்து, பாசிப் பயறு மற்றும் செட்டை அவ்வரை, சோயா போன்ற அவரை வகைகளைச்சேர்த்துக்கொள்வதால் உடம்பிற்குத் தேவையான புரதத் தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

விலங்குப் புரதங்களான மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி, முட்டை, மீன், பால், வெண்ணெய் என்பன விலைகூடியதாக இத் தேவைகளை ஒரு சாதாரண குடும்பத் தலைவியால் மாதம் முழுவதும் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கும். இதனை உணர்ந்து பல பெண்கள் தங்கள் வீட்டிலேயே ஆடு, மாடு, கோழி என்பனவற்றைக் குறைந்த எண்ணிக்கையிலாவது வளர்க்கிறார்கள். இதனால் நாளாந்த தேவைகள் பூர்த்தியாவதுடன் மேலதிக வருமானமும் பெறக்கூடியதாக இருக்கின்றது.

நாட்டின் முன்னேற்றம் கருதி விவசாயத் திணைக்களம், மாதர் முன்னேற்றச்சங்கங்கள் என்பன போஷாக்கு, மரக்கறி, ஆடு, மாடு கோழி வளர்த்தல் போன்ற பயிற்சி நெறிகளைப் பெண்களுக்காக ஒழுங்கு செய்கின்றன. இதனால் பெண்கள் பெரிதும் நன்மையடைகின்றனர்.

## குழந்தையின் போஷாக்கு

குழந்தையின் போஷாக்கிலும் பெண்ணின் பங்கு நன்கு அறியப்பட்டுள்ளது. குழந்தையின் போஷாக்குப் பற்றிய அறிவூட்டும் நூல்களும், சஞ்சிகைகளும் குவிந்து கிடக்கும் இன்றைய உலகில் தாய்ப் பாலிற்கு பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தாய்ப் பாலின் அருமையை, குழந்தைப் பால் தயாரிக்கும் நிறுவனங்களே முன்னின்றுவிளம்பரப்படுத்துகின்றன. தாய்ப் பால் பூரண உணவாக இருப்பதாலும் அதனுள் அந்நிய கிருமிகள் உட்புகும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாக இருப்பதாலும்அது குழந்தைக்கு அதிசிறந்த உணவாக விளங்குகிறது. இதனால் வேலைக்குப் போகும் பெண்களும் சிரமம் பாராமல் குழந்தைகட்கு தாய்ப் பாலை ஊட்டுவதில் ஊக்கம்செலுத்த வேண்டும்.

பெண்கள் கருவுற்றிருக்கும் நாள் தொடக்கம் குழந்தைக்குப் பாலூட்டும்இறுதிக் காலம் வரை நல்ல சத்தான உணவுகளை உட்கொண்டு உடல் நலத்தைப் பேண வேண்டும். தாயின் உடல் நலம் குழந்தையின் விருத்தியை மட்டுமன்றி சுரக்கும் பாலின் தன்மைமையையும், அளவையும் நிர்ணயிக்கின்றது. உயர்ரக உணவுவகைகளை வாங்கிச் சாப்பிட வசதியில்லாத கருவுற்றிருக்கும் பெண்கள் முக்கியமாக பால், கீரை, இலை வகைகள், அந்தந்தக் காலங்களில் பெருமளவில் கிடைக்கும் பழ வகைகள் என்பனவற்றை உணவுடன் சேர்த்துக்கொள்ளலாம். தங்களது உடல் நிலையைப் பாதுகாத்து குழந்தைகட்கு பாலூட்ட தகுதியானவர்களாகப் பேணிக் கொள்வது பெண்களின் தலைசிறந்த கடமைகளில் ஒன்றாகும்.

இன்றைய உலகில் பெண்கள் தாய்மார்களாக மட்டும் இல்லாமல் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திலும் பெரிதும் பங்குபெறுகின்றனர். உணவுற்பத்தியில் பெண்களின் பங்கு என்று கருதும்போது கிராமங்களில் தோட்டங்களிலும், வயல்களிலும் வேலை பார்க்கும் பெண்கள் தொடக்கம் பெரிய திணைக்களங்களையும், விவசாய ஆராய்ச்சி நிலையங்களையும் இயக்கும் பொறுப்புள்ள இயக்குநர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

ஒரு கிராமத்தில் பயிர்ச்செய்கை அல்லது விவசாயத்தை எடுத்துக்கொண்டால் ஆண்களுடன் சரிக்குச்சரி பெண்கள் வேலை செய்வது அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக நெல் வயல்களில், நிலம் பண்படுத்துவதுதொடக்கம், நெல்லைப் பதப்படுத்தி அரிசியாக்கும்வரை பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். நாற்றுநடுகை போன்ற பொறுமையைச் சோதிக்கும் வேலைகளையும், களைபிடுங்குதல், தூற்றுதல்போன்ற வேலைகளையும் பெண்களே செய்கின்றனர்.

மரக்கறி, பழவகைச் செய்கைகளிலும் பயிர்ச் செய்கை, பராமரித்தல், அறுவடை போன்றவற்றிலும் பெண்கள் ஈடுபடுகின்றனர். கிராமங்களில் பெரும்பான்மையான

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்கள் முன்னணி

புவியியல் அமைப்பும், காலநிலைத்தன்மையும் நமது நாட்டை ஒரு விவசாய நாடாக மிளிரச் செய்துள்ளன இதன்அடிப்படையில் எமது விவசாய பொருளாதாரத்தை நம் நாட்டின் பண்டைய குளங்களும் நீர்ப்பாசன அமைப்புக்களும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான விவசாயப் பொருளாதாரத்தை நடைமுறைப் படுத்துகையில் பெண்கள் அதில் வகிக்கும் பங்கும் தீர்மானிக்கப்படுகிறது.

அக்காலத்தில் குடும்பம் ஒன்றின்தீர்மானத்திலும், சமூக, மத, கோட்பாட்டின் அடிப்படையில் குடும்பம் ஒன்றின் முக்கியஸ்தராக தந்தை விளங்கியதனுலும் குடும்பத்தை வழிநடத்தும் பொறுப்பு அவரையே சார்ந்தது. இவ்வாறான குடும்பத் தலைமைத்துவம் பெண்களுக்குக் கிடைத்த ஸ்தானம் ஒதுக்கப் பட்ட கடமைகள் சம்பந்தமாகப் பலவாறான நம்பிக்கைகள் அக்காலத்தில் நிலவின. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

பெண்களைப் பொறுத்தளவில் அவர்கள் ஆண்களிடம் மகளாக, தாயாக அல்லது மனைவியாக கடமை புரியக்கூடிய இடம் வீடாக விளங்கியது. இதனால் வீடு தவிர்ந்த வெளிச் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பெண்களுக்கு சந்தர்ப்பம் குறைவாகவே இருந்தது. இல்லாள் என்ற முறையில் பொருளாதார நடவடிக்கைகளில் தீர்மானங்கள் எடுப்பதற்கோ, உத்தரவாதம் அளிப்பதற்கோ சந்தர்ப்பம் இருக்கவில்லை. இதேபோல,கல்வியிலும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இக்காரணங்களினால் பிரதானவருமான மார்க்கமாக இருந்த விவசாய நடவடிக்கைகளிலும் இவர்களது பங்கு வரையறுக்கப் பட்டிருந்தது. நாற்றுநடுதல்,அறுவடைசெய்தல் போன்ற நடவடிக்கைகளே பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தன. இதைத் தவிர வயலில் வேலை செய்யும் தமது கணவனுக்கு அல்லது ஆண் கூலியாட்களுக்கு உணவு சமைத்துக் கொடுத்தல் மற்றும் உபஉணவுப் பயிர்ச் செய்கையின் போது ஆண்களுக்குஉதவி பிடி வேலை செய்தல் போன்ற காரியங்களிலும் பெண்கள் ஈடுபட்டனர். இந்த அடிப்படையில் பெண்கள் ஏற்றுக்கொள்ளும் சிரமமும், நல்கும் உழைப்பும் பொருளாதாரத்தில் ஒரு வளர்ச்சியாக ஏற்றுக் கொள்ளலாம்.

சுதந்திரத்தின் பின்னர் நெல் உற்பத்தி முதலிடத்தைப் பெற்றது. விவசாய பொருளாதாரத்துறையில் நாட்டை முன்னேற்றுவதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டன. இதன் பலனாக நாட்டின் பல பாகங்களிலும் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டங்களின் பலனாக மக்களுக்குக் காணிகள் கிடைத்தன. இதனால் அவர்களுக்கு விவசாயத்தில் ஆர்வம் ஏற்பட்டது. அவர்கள் விவசாய நடவடிக்கைளிலும் ஈடுபட்டனர். இதன் பெறு பேறாக அந்நடவடிக்கைகளில் பெண்களுக்கும் பங்குபற்றும் வாய்ப்பு உருவானது. பெண்களைப் பொறுத்தளவில் தமது கணவனுக்கு ஒத்தாசை புரிவதிலேயே அவர்களுக்கான இடம் ஒதுக்கப் பட்டது.

—திருமதி. ஹரிப்பிரியா கருணாரட்ன—
(ஆராய்ச்சிப் பயிற்சி உத்தியோகத்தர்)

இக்காரணத்தினால் பெண்கள் இன்று விவசாய நடவடிக்கைகளிலும், வேறும் பொருளாதார நடவடிக்கைகளிலும் பண்டைய காலத்தில் ஒதுக்கப்பட்ட இடத்திலும் மாறான ஒரு அந்தஸ்தைப் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய அபிவிருத்தித் திட்டப் பகுதியில் பெண்களுக்கு உரித்தான தீர்மானம் எடுக்கும் உரிமை, ஆண்களுடன் வேலை செய்யும்போது அவர்களுக்கு ஒதுக்கப்படும் கடமைப்பகுதி, இல்லாள் என்ற வகையில் அவர்களுக்கு உரித்தான கடமைகள், சமூகத்தில் ஒரு அங்கத்தவர் என்ற ரீதியில் அவர்களுக்குள்ள அந்தஸ்து ஆகியன சம்பந்தமாக பொருளாதார அறிஞர்கள், விவசாய சமூகவியல் அறிஞர்கள் ஆகியோரின் கவனம் திரும்பியுள்ளது. முக்கியமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இது சம்பந்தமான ஆய்வுகள் நடாத்தப்பட்டு வெவ்வேறு விதமான திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டுள்ளன.

## பெண்களின் நிலை

கல்லோயா அபிவிருத்தித் திட்டப் பகுதியில் உள்ள தமிழ், சிங்கள விவசாயிகள் வாழும் குடியிருப்பு நான்கில் விவசாய நடவடிக்கைகளிலும், வீட்டுப் பணிகளிலும் ஈடுபடும் பெண்களின் நிலை சம்பந்தமான ஆய்வுகளின் வாயிலாக சில விபரங்கள் அண்மையில் திரட்டப்பட்டன. விவசாயத்தில் பெண்களின் பங்கு, நெல்லுற்பத்தி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் அவர்கள் செலவிடும் காலம், வீட்டுப் பணிகளுக்கு அவர்கள் செலவிடும் காலம் ஆகியன குறித்தும், குடும்பத்தலைவி என்ற ரீதியில் வீட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது சம்பந்தமாகவும், விவசாயப் பெண் என்ற அடிப்படையில் விவசாய நடவடிக்கைகளில் தீர்மானங்கள் எடுக்கும் ஆற்றல் சம்பந்தமாகவும், இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கும்போது தனது கணவனுக்கு அளிக்கும் உதவி, வீடு தவிர்ந்த வெளி வேலைகளுக்கு செல்வது, சங்க அமைப்புக்களில் வகிக்கும் பங்கு ஆகியன சம்பந்தமாகவும் இந்த ஆய்வின்போது ஆராயப்பட்டது.

கல்லோயா பகுதியில் ஆண்களினதும், பெண்களினதும் கல்வித்தரத்தைப் பற்றி ஆராய்ந்தபோது பெண்களின் கல்வித்தரம் ஆண்களின் கல்வித்தரத்திலும் குறைவாகவே இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நெல் உற்பத்தி நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு சம்பந்தமாகப் பார்க்கும்போது நெல் உற்பத்திக்கான நிலத்தைப் பண்படுத்தல், பசளையிடுதல், கிருமிநாசினி தெளித்தல் போன்ற நடவடிக்கைகள் இன்றும் ஆண்களின் கைகளிலேயே தங்கியுள்ளன. இருப்பினும் விதை நெல், தயாரிப்பு, நாற்றுமேடை தயாரிப்பு போன்ற நடவடிக்கைகளில் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து வேலை செய்யும் நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

இலங்கை வரலாற்றில் பெண்களினால் செய்யப்படும் வேலை எனக் கணிக்கும் களை பிடுங்கும் வேலை இப்பகுதியில் பெரும்பாலும் ஆண்களினாலேயே செய்யப்படுகின்றன. அக்காலத்தில் பெண்களினால் செய்யப்பட்ட களை பிடுங்கும் வேலை தற்போது களைகொல்லியினால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் அறியக்கூடியதாக இருந்தது. களை கொல்லி தெளிக்கும் காரியத்தில் ஆண்களே ஈடுபடுவதனால்தான் களை பிடுங்கும் வேலையில் ஆண்கள் ஈடுபடுகிறார்கள் எனக் குறிப்பிடுகின்றோம். உண்மையில் கைகளினால் களைகளை பிடுங்கும் நடவடிக்கைகளில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் ஈடுபடுகின்றனர்.

நெல்லைத் துப்புரவாக்குதல், நெல்லைச் சாக்கிலடைத்தல், தூற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் பெரும்பாலும் பெண்கள் பங்குபற்றுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. எனினும், தூற்றிய நெல்லை வீட்டுக்குக் கொண்டுசெல்வது போன்ற கடுமையான கருமங்களை ஆண்களே பெரும்பாலும் செய்கிறார்கள். மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் சிங்களப் பெண்களைவிட தமிழ்ப் பெண்களே அதிகப்படியான விகிதத்தில் ஈடுபடுகின்றனர் என்பதை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம். இருப்பினும், மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு செலவழிக்கும் காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ் - சிங்களப் பெண்களின் விகிதம் நேர்மாறாக இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## தீர்மானங்கள்

விவசாயம் சம்பந்தப்பட்ட தீர்மானங்களை எடுப்பதில் இன்னும் ஆண்களே முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். காணிப் பிரச்சினை, பயிர்ச்செய்கையை ஆரம்பித்தல், விதை நெல்லைத் தெரிவுசெய்தல், நாற்று நடுதல் அல்லது விதைத்தல் போன்ற முக்கியமான தீர்மானங்களை எடுப்பதிலும் ஆண்களே முதலிடத்தை வகிக்கிறார்கள். அத்துடன் விளைச்சலைச் சந்தைப்படுத்தும்போது வீட்டுத் தேவைக்காக ஒதுக்கும் நெல்லின் அளவைத் தீர்மானிப்பதிலும் ஆண்களே முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள்.

எவ்வாறாயினும் வீட்டின் பொருளாதாரம் பற்றிய நடவடிக்கை எடுப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களே முன்நிற்கின்றனர். அன்றாடக் குடும்பச் செலவீனங்கள் சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதில் பொதுவாக சிங்களக் குடும்பங்களில் நூற்றுக்கு ஐம்பது வீதமான குடும்பங்களில் ஆண்களின் உதவியின்றி பெண்கள் மட்டுமே செயற்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குடும்ப அங்கத்தவர்களின் உடைகளுக்கான பண ஒதுக்கீடு, வைத்தியச் செலவு, கல்விச் செலவினம் போன்றவைகளில் நூற்றுக்கு ஐம்பது வீதமான வீடுகளில் ஆண்களும், பெண்களும் கூட்டாகத் தீர்மானங்களை எடுப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. கணிசமான மீதி வீடுகளில் இப்படியான தீர்மானங்களை பெண்கள் தனியாக எடுப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

பெண்கள் வீட்டு வேலைகளுக்குப் புறம்பாக வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது சம்பந்தமாக ஆராய்ந்தபோது அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. தென்னோலை பாய், பைகள் பின்னுதல் போன்ற கைத்தொழிலில் திறமை வாய்ந்த பெண்களைச் சந்திக்கக் கூடியதாக இருந்தாலும் அவர்கள் அதில் அதிக அக்கறை செலுத்தாததை அவதானித்தோம். என்னதான் திறமை இருந்தாலும் இத்தொழிலுக்கான மூலப்பொருட்களை பெறுவதிலும், உற்பத்தியான பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் உள்ள சிரமங்களே பெண்கள் இத்தொழிலில் ஈடுபடாமைக்கு ஒரு முக்கிய காரணமாகும். இதனால் விவசாயக் குடும்பப் பெண்களின் வாழ்க்கை வீட்டோடும் வயலோடும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கிராமிய மட்டத்திலுள்ள சங்க அமைப்புக்களில் பெண்களின் பங்கு சம்பந்தமாக பார்க்கும்போது மத சேவைச் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை போன்றவற்றில் நூற்றுக்கு ஐம்பது வீதமான அங்கத்தவர்கள் பெண்களாவர். இந்த உண்மை சிங்களப் பெண்களுக்கு மட்டுமே உரித்தானது என்பதை விசேடமாகக் குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்ட சங்கங்கள், சபை ஆகியவற்றைத் தவிர கிராமிய மட்டத்திலான இதர சங்கங்கள், கூட்டமைப்புக்கள் ஆகியவற்றில் பெண்களின் பங்கு மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. இச்சங்கங்கள் மிகவும் சீர்கேடான நிலையில் இயங்கி வருவதனுலேயே பெண்கள் இவற்றின் நடவடிக்கைகளில் பங்கு எடுக்காமைக்குக் காரணமாகும்.

இந்தப் பெண்களுக்குக் கிராமிய மட்டத்திலான அமைப்புக்களின் மூலம் பொருளாதார லாபம் ஈட்டக்கூடிய கைத்தொழில், தையல் போன்ற தொழிலை மேற்கொள்வதற்கான வசதிகளை அல்லது பிரதேச மட்டத்தில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களை உபயோகித்து செய்யக்கூடிய பொருட்களைச் செய்வது சம்பந்தமான பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

இவ்வம்சங்கள் அனைத்தையும் பொதுவாகப் பார்க்குமிடத்து மேற்குறிப்பிடட பொருளாதார, சமூக நடவடிக்கைகளில் தற்காலப் பெண்களின் பங்களிப்பின் நிலையும், அளவும் மாறுபட்டிருப்பினும், பெண்களைப் பொருளாதார, சமூக நடவடிக்கைகளில் இருந்து அப்பாற்படுத்தி வைத்தலென்ற இலங்கையின் பண்டைய சமூக வழக்கம் இன்னும் குறிப்பீடத்தக்க அளவு மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெறுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

*(தமிழாக்கம் : என். எல். எம். முஸாபிர்)*

## 50 கோடி மக்களுக்கு சாப்பிட எதுவுமேயில்லை

எந்தவொரு நாளிலும், உலகத்தில் உள்ள சுமார் 50 கோடி மக்கள் எதையுமே சாப்பிட வழியின்றித் தவிக்கிறுர்கள். மேலும் 50 கோடி மக்கள் நாளொன்றில் ஒன்று அல்லது இரண்டு தரமே சாப்பிடக்கூடிய நிலையில் உள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் ஒரு இலட்சம் பிள்ளைகள் தமது பார்வையை இழக்கின்றனர். காரணம் : உயிர்ச்சத்து 'ஏ' குறைபாடு. (இவ்வுயிர்ச்சத்து கடும் பச்சை இன மரக்கறிகளிலும், கரட்டிலும் காணப்படுகிறது.)

ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, இமாலயப் பிரதேசம் ஆகிய இடங்களிலுள்ள பெண்கள் அயோடின் குறைபாட்டினுல் பாதிக்கப்படுகிறுர்கள். இதனுல் பெண்களில் 5 சதவீதத்தினர் மனநோய்க்குள்ளாகிறுர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத் துறையில் பெண்கள் பங்கு

செல்வி சித்திரா பெரேரா
(ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர்)

அண்மைக் காலங்களில் 'அபிவிருத்தி' என்ற பதம் நம் அனைவரினதும் காதுகளில் எதிரொலித்த வண்ணம் இருக்கின்றது. அபிவிருத்தி என்ற பதத்திற்கு பல விதங்களிலும் விளக்கம் அளிக்கமுடியும். எனினும், நாம் இங்கு எடுத்துக் கொள்வது பொருளாதாரத்துறையிலும், அறிவுத்துறையிலும் எவ்வாறு பெண்களை ஈடுபடுத்தலாம்; அவர்கள் எவ்வாறு இத்துறைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதேயாகும்.

அபிவிருத்தியில் பெண்கள்ஈடுபட்டதை, ஈடுபடுவதை வெளிக்காட்டு முகமாகவே சில ஆண்டுகளுக்கு முன் சர்வதேச மகளிர் ஆண்டை ஐ. நா. பிரகடனப்படுத்தியது.

முன்னைய காலங்களில் பெண்கள் சமூகத்தில் எதுவித அந்தஸ்தும் அற்றவர்களாகவே கருதப்பட்டார்கள். அக்காலப் பெண்கள் நாட்டில் அபிவிருத்திக்கு மேற்கொண்ட சேவை என்னவென்றால் நற்பிரஜைகளை ஈன்றெடுத்ததே. அத்துடன் தமது குடும்பத்தின் அன்றாடத் தேவையான உணவினை சமைப்பதுடன் பிள்ளைகளின் அல்லது கணவனின் அல்லது சகோதர சகோதரிகளின் அல்லது பெற்றோர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாகும். இந்த அமைப்பில் அவள் தனது குடும்ப அங்கத்தவர்களுக்கு தாய் அல்லது மகள், அல்லது சகோதரி என்ற ஸ்தானத்தில் இருந்து கொண்டு அன்பு, இரக்கம், ஈவு போன்ற நற்பண்புகளைச் செலுத்தி ஒழுக்கமான ஒரு குடும்பத்தை உருவாக்குவதாகும்.

'நீ திருந்து; நாடு திருந்தும்' என்பது முதுமொழி. கிராமம் என்பது பல குடும்பங்களின் கூட்டமாகும். எனவே, அன்பு, இரக்கம், ஈவு ஆகியவற்றைக் கொண்ட பிரஜைகளைக்கொண்ட ஒரு குடும்பம் அக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், சுபீட்ச வாழ்வுக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்கும்.

நற்பண்புகளைக் கொண்ட பிள்ளைகளைப் பார்க்கும்போது எமக்கு முக்கியமாக ஞாபகம் வரவேண்டியது பெண்களே. பெண்கள் என்று கூறும்போது தாய்மார்களைத்தான் குறிக்கும். தாய்மார்களே தமது பிள்ளைகளை நற்பிரஜையாக்கும் கைங்கரியத்தில் முக்கிய பங்கினை வகித்திருப்பார்கள். பிள்ளைகளைப் பாலூட்டி, சீராட்டி, நற்பண்புகளுடன், பிறர் மதிக்கும் வகையில் வளர்ப்பவள் தாயே.

தற்காலப் பெண்கள் தமது சமூக முன்னேற்றத்தில் கணிசமான பங்கினை எடுக்கும் அதேவேளை, நாட்டின் பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளிலும் தமது பங்கினை செலுத்தத் தயங்குவதில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்காக அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் கொஞ்சநஞ்சமல்ல. பல்வேறுபட்ட தரங்களில் கல்வியையும், செயல்முறைப் பயிற்சிகளையும் பெற்ற சில பெண்கள் நம் நாட்டு அபிவிருத்தியில் பங்கு கொள்ள முடியாமல் இலைமறை காய்களாக இருப்பது வருத்தத்துக்குரிய விஷயமே.

தமது குடும்பத்தில் அங்கம் வகிக்கும் சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரை பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்து பாதுகாப்பதற்கு இன்று பெண்கள் முன் வந்துவிட்டார்கள். இதனால் இப்பெண்கள் தம்மால் செய்யக் கூடிய, செய்ய முடியாத விஷயங்கள் எவையென்று ஆராய்ந்து பார்க்காமல் தமது முழுச் சக்தியையும், நேரத்தையும் செலவழித்து வருமானம் தரக்கூடிய எந்தத் தொழிலையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

பெண்களில் பெரும்பாலோர் சுயமாகவே தொழிலில் ஈடுபட்டு நாட்டிற்குத் தேவையான பலதரப்பட்ட உற்பத்திப் பொருட்களைப் பெருக்கவும், அவற்றை ஏற்றுமதி செய்து வெளிநாட்டுச் செலாவணியைப் பெறவும் உதவுகின்றார்கள். இதன் பொருட்டு அவர்கள் தமது சிந்தனை போக்குகளின் தன்மைக்கு ஏற்ப நாட்டின் வளங்களை அறிவதுடன், அவற்றின் மூலம் பெறும் நன்மைகளையும் அடைகின்றார்கள். இது தவிர இன்று நமது நாட்டுக்கு பாரிய அளவில் வெளிநாட்டுச் செலாவணியை சம்பாதித்துக் கொடுக்கும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் அவர்களில் பெரும்பாலானோர் பெண்களாகவே விளங்குகின்றார்கள்.

கமத்தொழிலில் பெண்களின் ஈடுபாடு சம்பந்தம் ஆகியவற்றை ஆராய்ந்தால் அவர்களின் ஆற்றல் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடியதாகும். நமது நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியைப் பெற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும் பிரதான ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்கு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு உதவும் தொழில்களை நோக்குமிடத்து அவற்றுடன்சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் பெண்கள் தமது உழைப்பை கணிசமானஅளவு நல்குகிறுர்கள் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. இதே வேளை உற்பத்தித் துறையிலும், கமத் தொழில் நடவடிக்கைகளிலும் எதுவித தாழ்வுமனப்பான்மையுமின்றி ஆண்களுடன் சேர்ந்து நின்று ஈடுபடுகிறுர்கள். அவர்களும் ஆண்களின் உழைப்புக்கு ஏற்ற உழைப்பை அளிக்கிறுர்கள். இதனுல் நம் நாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளில் மட்டுமின்றி பயனுள்ள சமுதாய சேவையை அளிப்பதிலும் பெண்கள் சிறந்து விளங்குகிறுர்கள்.

பெண்கள் பலதரப்பட்ட மட்டங்களில் நிர்வாக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறுர்கள். இந்நடவடிக்கைகளில் பெண்களைக் கூடியளவு பங்குபற்றச் செய்வதனுல் அபிவிருத்திப் பாதையில் பல முன்னேற்றங்களை காணலாம்.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளபடி முன்னைய காலப் பெண்களுக்கு உரித்தாக இருந்த பொறுப்புக்களும், கடமைகளும், தற்போதைய பெண்களுக்கும் உரித்தானதே. இதற்கு திருப்திகரமான மனுேநிலையும், விவேகமும் அவசியமாகும்.

இக் குணுதிசயங்களைச் சாதாரண தொழில் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களை விட நிர்வாகத்துறை சம்பந்தப்பட்ட தொழிலில் உள்ளவர்கள் பெறுவது சுலபமாகும். இதனுல் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளில் பெண்களைப் பங்குபெறச் செய்யும்போது அவர்களுக்கு உரித்தான பண்புகளில் விசேடகவனம் எடுக்கவேண்டும்.

மேலை நாடுகளில் ஒரு குடும்பத்தின் சகல நடவடிக்கைகளையும் பெண்களே முழுமையாக மேற் கொள்கிறுர்கள். இதனுல் அவர்கள் இரவு பகலாக உழைக்கிறுர்கள். எனவே, அவர்களின் நடவடிக்கைகளை சமூக கண்ணுேட்டத்துடன் பார்க்காமல் காருண்யத்துடன் நோக்க வேண்டியுள்ளது.

பொருளாதார முன்னேற்றம் என்பது தேசிய உற்பத்தி அதிகரிப்பேயாகும். பெண்களின் துணையுடன் உற்பத்தி செய்யும் பொருட்களை பெண்களின் துணையின்றி சந்தைப்படுத்துவது கஷ்டமாகும். நிர்வாக,



உற்பத்தித் துறைகளில் வர்த்தக ரீதியான சேவையை விரிவுபடுத்துவதற்காகப் பலதரப்பட்ட வகைகளில் பெண்கள் பங்கினைச் செலுத்தியுள்ளனர். விசேடமாக தனியார் நிறுவனங்களில் வரவேற்புபசாரகராகப்பணி புரிபவர் பெரும்பாலும் பெண்ணுகவே இருப்பாள். பெண்களுக்குள்ள அன்பு, இரக்கம், பொறுமை, சாந்தம் ஆகிய குணங்களே அவர்களை வரவேற்புபசார பணிகளில் அமர்த்துகிறது.

நம் நாட்டில் அரச நிறுவனங்களை விட தனியார் நிறுவனங்கள் முன்னணியில் திகழ்கின்றன. இதற்கு தனியார் நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் பாவனையாளர்களை நன்கு உபசரிப்பது ஒரு காரணமாகும். அரசாங்க, தனியார் நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களின் வேறுபட்ட மனுேநிலையும் இதற்கு இன்னெரு காரணமாகும்.

சம்பள வேறுபாடு, இலகுவான சேவை, திறமையற்ற நிர்வாகம், ஸ்திர சேவை என்பன போன்ற காரணங்கள் அரச துறையை மோசமடையச் செய்துள்ளன. எனவே, அரச துறையில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இன்னும் இப்படியான குறைபாடுகளை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பது சாலச் சிறந்ததாகும்.

நவீன தொழில் நுட்பத்திலும், விஞ்ஞானத்திலும் முன்னேறும் உலகத்துடன் நாமும் முன்னேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறில்லாமல் பொருளாதார முன்னேற்றத்தை மட்டும் சிந்திப்பது சிந்தனையாக மட்டுமே இருக்கமுடியும். கல்வித் துறையில் நவீன தொழில் நுட்பத்துக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானத்துக்கும் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

நம் நாட்டுப் பெண்களுக்கு உயர் கல்வி பெறக்கூடிய சுதந்திரம் உண்டு. உயர் கல்வியைப் பெறும் பெண்கள் பிற்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கெடுக்கும் வழிகளைத் தேடிக்கொள்ளலாம். ஒருவர் கல்வியைப் பெறுகிறார் என்றால் அக்கல்வியின் பயன் எழுதுவதும், வாசிப்பதும் ஏதாவது விஷயத்தை அறிந்து கொள்வதும் மட்டுமல்ல. அவர் தனது கல்வியறிவைக்கொண்டு பிற்காலச் சந்ததிக்கு ஏதாவது துறையில் அறிவு ஊட்டக்கூடிய நிலையில் விளங்கவும் வேண்டும்.

சிறு பருவம் தொட்டு ஒரு பிள்ளையை நல்வழியில் கொண்டு செல்லும் பெண்கள் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க பங்கினைச் செலுத்துகிறார்கள். யாருடனும் பழகக்கூடிய ஆற்றலையும், அன்பையும், விவேகத்தையும் உள்ளடக்கிய ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். அவர்கள் தமது பிள்ளைகளுடன் அல்லது இளைய சகோதர சகோதரிகளுடன் எந்நேரமும் பழகுவதனாலும், பிள்ளைகளின் அல்லது இளைய சகோதர சகோதரிகளின் ஒழுக்கம், பாதுகாப்பு போன்றவற்றில் கூடிய அனுபவம் இருப்பதனாலும் அவர்களுக்கு இத்தொழிலில் ஈடுபடும் பொழுது பெரும் மனத் திருப்தி ஏற்படுகின்றது. இவ்வாறான சேவைகளில் ஈடுபடும் பொழுது பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். பெரும்பாலும் தலைமை ஆசிரியர். அதிபர் போன்ற உயர் அதிகாரிகளின் கடுமையான போக்கு காரணமாக தமது கடமைகளைச் சரிவர அல்லது சிறந்த முறையில் நிறைவேற்ற முடியாமற் போகலாம். அதேபோல சமூகத்தில் ஏனையவர்களைக் காட்டிலும் மற்றவர்களின் பழிச் சொல்லுக்கும், அவப்பெயருக்கும் ஆளாகலாம்.

பண்புள்ள, காருண்யமுள்ள பிரஜைகளை உருவாக்குவதென்றால் ஆசிரியர், மாணவர்களிடையே கருத்தொருமைப்பாடும், ஒத்துழைப்பும், ஐக்கியமும் இருக்க வேண்டும். தமது மாணவர்களின் மனோநிலைக்குக் கேடு ஏற்படாத வகையில் அவர்களைப் பார்த்துக் கொள்வது ஆசிரியர்களின் கடமையாகும்.

அபிவிருத்தி என்பது ரூபா சதத்தில் கணக்கிடக் கூடியதொன்றல்ல. ஆதலினால் விலைமதிக்க முடியாத எமது கலாச்சாரத்தின் பெறுமதியைப் பாதுகாத்து அபிவிருத்தித் துறையில் முன்னேற வேண்டியுள்ளது. அத்துடன் நம் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள், மனநிலை, மதம் ஆகியவற்றையும் கருத்திற் கொள்ளவேண்டியுள்ளது. அதேவேளை அபிவிருத்தி அடைந்து வரும்போது உண்டாகக் கூடிய மாற்றங்களை பெண்களின் விவேகத்தினால் சமாளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

பல இடர்பாடுகளுக்கு மத்தியில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கெடுக்கின்ற பெண்கள் தாம் பெற்றுக் கொடுத்த அபிவிருத்திக்கு பழியாதல் கவலைக்குரியதாகும். நான் இவ்வாறு சொல்வதற்கு காரணம் என்னவெனில் பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பெண்களின் கௌரவம் விளம்பரத்துறையில் மாசுபடுகின்றது இன்றைய வர்த்தக உலகில் புதுப் புதுப் பொருட்களை தயாரிக்கும் அல்லது விற்பனை செய்யும் வர்த்தகர்கள் இப்பொருட்களை விளம்பரப்படுத்துவதற்கு பெண்களையே நாடுகிறார்கள். பெண்களின் கவர்ச்சிப்படங்களை பிரசுரித்து பொருட்களை விற்பதில் அவர்கள் நாட்டம் செலுத்துகிறார்கள். இங்கு பெண்களால் கட்டியெழுப்பப்பட்ட நாகரீகம் மிக்க சமுதாயம் அவர்களை வர்த்தக கண்ணோட்டத்துடன் நோக்குகின்றது. போட்டிக்குரிய பல்வேறு பொருட்களை விற்பனைசெய்வதற்கு பிரசாரம் தேவையான போது பெண்களை ஒரு பிரசார ஊடகமாகப் பாவித்தல் அவர்களுக்கு நிந்தனை செய்வதாகும்.

அக்காலத்தில் ஒதுங்கி, எவ்வித அபிவிருத்தித் துறையிலும் பங்குகொள்ளாத பெண்கள் இன்று தமது இனத்தின், நாட்டின் முன்னேற்றத்திற்குச் சேவை அளிப்பதில் முன்னணி வகிக்கின்றனர். அவர்களுக்கு இன்று சமூகத்தில் முன்னணி ஸ்தானம் கிட்டியுள்ளது. எனினும், ஒரு குடும்ப அமைப்பின் கீழ் பெண்கள் சற்று தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஊருக்கும், உலகத்திற்கும் உழைக்கும் உத்தமிகள் வீட்டில் அடங்கிக் கிடப்பது அவர்களின் சுதந்திரத்திற்கு ஒரு தடைக்கல் என்பதே என் அபிப்பிராயம். இந்நிலை மாற வேண்டும்.

(தமிழாக்கம்: முஸாபீர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# சாடியிலுள்ள செடியை மாற்றும் முறை

ம. மகிந்தன்
*(ஆராய்ச்சிப் பயிற்சி உத்தியோகத்தர்)*

கொழும்பு போன்ற சனத்தொகை அதிகம் உள்ள இடங்களில் வசிப்போர், மாடி வீடுகளில் குடியிருப்போர் போன்றவர்கள் தமது சுற்றுடலில் மரங்களை நடுவதற்குப் போதிய இடவசதி இல்லாமல் இருப்பதை நாம் கண்டுள்ளோம்.

இத்தகையோரில் சிலர் தங்கள் வீடுகளிலும் மரங்களை வளர்த்து தமக்கும் , சுற்றுடலுக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும், காலத்திற்குக்காலம் தமது மரங்களில் பூக்கள் பூத்துக் குலுங்குவதையும், காய்கள் காய்த்துக் குலுங்குவதையும், கண்டு மகிழவும் பூச்சாடிகள் போன்ற சிறிய சட்டிகளில் பூக் கன்றுகளையும், மரக்கறி வகைகளையும் வளர்த்துப் பயன் பெறுவது உண்டு.

தமது பூச்சாடியில் வளரும் கத்தரி மரம் காய்த்துவிட்டால் அவற்றைச்சமைத்து உண்ணும் பொழுது 'ஆகா' கடையில்வாங்கிச் சமைக்கும் கத்தரிக்காய் இப்படிச் சுவை இருப்பதில்லையே என்று வியக்கிறார்கள். தமது வீட்டுத் தோட்டத்திலிருந்து பெறும் மரக்கறி வகைகள், பழ வகைகள் சுவையில் கடையில் வாங்கிய பொருட்களிலும் கூடுதலாக இருக்கின்றது என்ற ஓர் உள்ளுணர்வு எல்லோருக்கும் ஏற்படுவது இயற்கையே. ஆனல், இத்தகையோரில் பெரும்பாலோர் பூச்சாடிகளில் கன்றுகளை நட்டுவிட்டு வாரத்திற்கு ஒரு தடவையோ இருதடவையோ நீர் ஊற்றுவதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாக கருதுகிறார்கள். இத்தகையோர் மரங்களை நடுவது மாத்திரமல்லாமல் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் வேண்டும் என்பதற்காகஇக்கட்டுரையில்பூச்சாடிகளில் மரங்களை எப்படி நடுவது, அவற்றை எப்படி வருடத்திற்கு ஒரு தடவை சாடியில் இருந்து அகற்றி மீண்டும் புதிய மண்ணில் நடுவது போன்றவை படங்களுடன் விளக்கப்படுகின்றன.

**பூச்சாடிகளை நடுகைக்காக தயார் செய்தல்**

நடுகைக்கு தெரிவு செய்யும் மரத்தின் வயதையும், தோற்றத்தையும் பொறுத்து ஏற்ற அளவான சாடிகள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். பின்பு சாடியின் வெளிப்புறமும் உட்புறமும் சுத்தமான நீரினல் நன்கு கழுவப்பட்டு படம் (1) இல் காட்டிய வாறு நீர் வெளியேறும் துவாரத்தைபெரிய உடைந்த மண்சட்டித் துண்டினல் அல்லது ஓட்டுத் துண்டினல் மூடுங்கள். பின்பு சிறிய மண்சட்டித்துண்டுகளினல் அல்லது ஓட்டுத் துண்டுகளினல் சாடியை 5 முதல் 10 செ. மீ. வரை சாடியின் உயரத்தைப் பொறுத்து மூடுங்கள். பின் 1.25 முதல் 2.5 செ. மீ. வரையான உயரத்திற்கு தென்னம் மட்டையினல் அல்லது பெரும் மணல் கொண்டு சாடியை நிரப்புங்கள். இப்படிச் செய்வதனல் சாடியில் உள்ள மரத்தின் வேர்ச் சூழலில் உள்ள சிறந்த மண் துணிக்கைகள் நீருடன் வெளியேருமல் பாதுகாக்க உதவும். பின்பு செழிப்பான மண், இயற்கை உரம் கொண்ட கலவையினல் சாடியின் அரைப்பகுதி உயரத்திற்கு நிரப்பவும். இப்படி நிரப்பிய கலவை மண்ணை நன்கு கையினல் அமர்த்தவும். இறுதியாக மீண்டும் மண் கலவையை சாடியின் மேல் பகுதியில் இருந்து 2 - 3 செ. மீ. ஆழத்தினல் (படம்1) படத்தில் காட்டியவாறு இருக்கக்கூடியதாக சாடியை நிரப்பவும். சாடியிலிருந்து மண் இவ்வளவு ஆழத்தில் இருப்பதனல் சாடியில் நீர் ஊற்ற வசதியாக இருக்கும். இப்படித் தயார் செய்யப்பட்ட சாடிகளில் நீங்கள் விதைகளையோ, நாற்றுக் கன்றுகளையோ, வெட்டிய துண்டுகளையோ நடலாம்.

ஒரு நாற்றை அல்லது கன்றென்றை எப்படிச் சாடியில் நடுவது என்பதை படம் 2, 3, 4 காட்டுகின்றது. கன்றை சாடியின்நீர் வெளியே துவாரத்திற்கு நேராக வேர் எல்லாப் பகுதிகளிலும் பரந்து இருக்கக் கூடியதாக வைத்து மண் கலவையால் வேரை மூடி மெதுவாகவும், அதே வேளை ஒழுங்கான முறையிலும் மண்ணை கையினல் அமத்தி விடுங்கள். இப்படிச் செய்வதனல் நீர் விரைவாக மண்ணிலிருந்து ஆவியாக வெளியேறுவதைத் தடுக்கலாம். இப்படி நடப்பட்ட கன்றை குளிர்மையான, நிழலான இடத்தில் இரண்டொரு தினங்களுக்கு வைத்து கவனமாக நீர் ஊற்றி வந்த பின் உங்கள் வீட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடியை மாற்றும் முறை




(1) சாடியில் செடி
(2) கைவிரலுக்கிடையே செடி
(3) சாடி மேசை விளிம்பில் தட்டப்படுகிறது
(4) செடியுடனுள்ள பந்து வடிவத்திலுள்ள மண்

நடுகை முறை




(A) நீர் வெளியேறு துவாரம்
(B) மண் சட்டித் துண்டு
(C) மணல்
(D) மண் கலவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் உங்களுக்கு விருப்பமான இடத்தில் சாடியை வைத்து நீர் ஊற்றி வருவதுடன் பூச்சித் தாக்கங்களிலிருந்தும், நோய்த்தாக்கங்களிலிருந்தும் மரத்தைப் பேணி வருவீர்களேயானால் நீண்ட நாட்களுக்குத் தாவரம் சாடியில் நின்று பிடிப்பதுடன் அதிக பூக்களையும், காய்களையும் தரும்,

## சாடியிலிருந்து மரத்தை மாற்றுதல்

சாடியில் வளரும் மரங்களை வருடந்தோறும் சாடியிலிருந்து அகற்றி மீண்டும் புதிய மண்ணில் நடுதல் அவசியமாகின்றது. இது வேர்கள் அழுகுவதையும், நெருக்கமாக வளர்வதைத் தடுக்கவும், மரத்தின் ஆரோக்கியத்தை அதிகரிக்கவும் உதவுகின்றது. பெரும்பாலும் மழை காலத்திலேயே மரங்களை சாடியிலிருந்து அகற்றவேண்டும். சாடியிலிருந்து மரங்களை அகற்றுவதற்கு படத்தில் காட்டியவாறு இடது கையில் 2ஆம், 3ஆம் விரல்களுக்கிடையே மரத்தின் தண்டுப் பகுதியைப் பிடித்துக்கொண்டுபெரு விரல் சாடியின் விளிம்பில் இருக்கக்கூடியதாக சாடியைத் தலைகீழாகக் கவிழ்க்கவும். பின் மெதுவாக சாடியின் விளிம்பை படத்தில் காட்டியவாறு மேசையிலோ, வேறு ஏதேனும் இடத்திலோ மெதுவாகத் தட்டும் போது, மரமானது படத்தில் காட்டியவாறு முழுமையாகச் சாடியிலிருந்து மண்ணுடன் வெளியே வரும். மரத்தை மீண்டும் அதே சாடியிலோ வேறொரு சாடியிலோ நடுவதற்கு முன் மேலதிக வேர்கள் வெட்டப்பட்டு, மண்ணின் ஒரு பகுதியும் மிகவும் அவதானமாக அகற்றப்பட்டு நன்குகழுவி உலர்ந்த சாடியில் புதிய மண்ணினால் சாடி நிரப்பப்பட்டு மரம் நடப்படல் வேண்டும். தேவைப் படின் மரத்தை சாடியிலிருந்து அகற்ற முன் 3, 4 மணித்தியாலத்திற்கு முன்பு சிறிதுநீர் ஊற்றலாம்.

**"கமநலம்" கவிதைப் பூங்கா**

# உழைத்து வாழ் நண்பா !

*உள்ளத்தில் கள்ளத்தை ஒளித்து வைக்காமலே*
*உண்மையைச் சொல்லிவிடு நண்பா! — பிறர்*
*எண்ணத்தில் உயர்ந்து, நிமிர்ந்து நின்றிட*
*உழைத்து வாழ்ந்திடு நண்பா!* (உள்ளத்தில்)

*பொய்யன் சோம்பேறி புரட்டனென்றே — ஊர்*
*பொல்லாத கதைபேசும் நண்பா!*
*மெய்ஞானி இவனென்று மெச்சி நிற்க ஊர்*
*அஞ்சாமல் முன்னேறு நண்பா!* (உள்ளத்தில்)

*வேலை என ஒன்று கிடைக்கவில்லை எனும்*
*வீணான பேச்சேனோ நண்பா! — விடி*
*காலை முதல் அந்தி மாலை வரை — நீ*
*கணநேரம் சோராதே நண்பா!* (உள்ளத்தில்)

*கையுண்டு காலுண்டு கட்டான உடலுண்டு*
*கவலை ஏன் உனக்கின்னும் நண்பா!*
*செட்டான விவசாயம் செய்திங்கு வாழலாம்*
*சிந்தைக்கும் மகிழ்வுண்டு நண்பா !* (உள்ளத்தில்)

— திருமதி. புவனேஸ்வரி பாக்கியநாதன்,
நோர்வூட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமநலம் வாசகரின் கைவண்ணம்

# வீட்டுத் தோட்டமும் பெண்களும்

இன்று பெரும்பாலான பெண்கள் (க.பொ. த.) சாதாரண தரம் வரையாவது கல்வி கற்கிறார்கள். படித்துவிட்டு வீட்டில் இருக்கும் பெண்கள் ஒன்றில் திருமணம் செய்கிறார்கள்; அல்லது வீட்டில் தாயாருக்கு சமையலில் உதவி செய்கிறார்கள்; அல்லது வேலைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் இப்பெண்கள் தமது ஓய்வுநேரத்தை எவ்வாறு கழிக்கிறார்கள்? பெரும்பாலும் பெண்கள் கதைப் புத்தகம் வாசிப்பதிலும், வெட்டிப்பேச்சுப் பேசுவதிலும் நேரத்தைக் கழிக்கிறார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் பொருளாதார ரீதியில் எவ்வித நன்மையும் அடைவதில்லை.

— செல்வி. தவராணி இராசையா —
திரியாய்.

இப்படியான பெண்கள் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட்டால் பொருளாதார ரீதியில் நன்மை அடைவதுடன் பல பயன்களையும் அடைய முடியும்.

வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடும் பெண்கள் சாதாரணமாக மிக இலகுவில் விளையக் கூடிய கத்தரி, வெண்டி, புடலங்காய், பயிற்றங்காய், மிளகாய் போன்ற மரக்கறி வகைகளையும், மரவள்ளி, இராசவள்ளி, கருணை போன்ற கிழங்கு வகைகளையும் செய்கை பண்ணலாம். இவற்றை உற்பத்தி செய்வதற்கு அவர்கள் சிறிய முதலீட்டையும், தமது சரீர உழைப்பையும் நல்கினால் போதும். தேவைப்படுமிடத்து - உரம், கிருமிநாசினி போன்றவற்றை வாங்குவதற்கு - ஒன்றில் கணவரின் அல்லது சகோதரர்களின் உதவிகளை நாடலாம்.

தோட்டச் செய்கையில் ஈடுபடும் பெண்கள் மண் பண்படுத்தல், நீரூற்றுதல், உரமிடுதல், கிருமிநாசினி தெளித்தல் போன்றவை சம்பந்தமான ஆலோசனைகளை இது பற்றி அறிந்தவர்களிடம் பெறுவது சிறந்தது. அல்லாவிடில் தோட்டச்செய்கை பாழடையக்கூடிய அல்லது விளைச்சல் குன்றக்கூடிய நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

வீட்டுத் தோட்டத்தில் மரக்கறி வகைகளை செய்கை பண்ணுவதனால் பல நன்மைகள் உண்டல்லவா? மரக்கறி வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம். சந்தைகளில் வாங்கும் மரக்கறி வகைகள் எவ்வாறு வாடி வதங்கி போஷாக்கு சக்தியை இழந்துள்ளது என்பதை நாம் அறிவோம் அல்லவா?

வீட்டிலேயே மரக்கறிகள் கிடைப்பதனால் சந்தைக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்படாது. சிலர் சந்தைக்குப் போவதற்கு பஸ்சுக்குப் பணம் செலவழிக்கிறார்கள்.

மரக்கறிகளை சொந்தத் தேவைக்கு எடுத்து மிகுதியை அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு விற்றுப் பணமாக்கலாம். இவ் வருவாயின் மூலம் நாம் நமது அன்றாடச் செலவுகளைச் சரிக்கட்டுவதுடன் எஞ்சிய பணத்தை சேமிக்கலாம்.

எனவே பெண்கள் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட்டு மேலே சொன்ன பயன்களை அனுபவிப்பதுடன், மரக்கறி உற்பத்தியில் பங்கெடுத்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உழைத்திட வேண்டும் என விரும்புகிறேன்.

## வாசகர் கடிதங்கள்

### மனதைக் கவர்ந்தது

'கமநலம்' ஆனி இதழைப் படித்தேன். கருத்துள்ள கட்டுரைகளும், கவிதைகளும் என் மனதைக் கவர்ந்தன அத்துடன் சமையல் குறிப்புக்களும் மிகவும் பயன்படக்கூடிய ஒரு அம்சமாக வெளிவருவது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

— செல்வி. கி. புஷ்பாம்பிகை,
பன்சல வீதி,
கென்கல்ல.

### பிரயோசனமானது

உங்களது நிலையத்தினால் வெளியிடப்படும் 'கமநலம்' பங்குனி இதழைப் பார்த்தேன். அதில் மேல் வகுப்பு மாணவர்களுக்குப் பிரயோசனமான விடயங்கள் அடங்கியிருந்தன.

— எம். எச். எம். சகாப்தீன்,
தவலத்துர மகா வித்தியாலயம்.
முருதா ஹமுல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோயா அவரை விதையில் உணவு வகைகள் தயாரித்தல்

## சோயாத் தோசை

தேவையான பொருட்கள் :

| | |
|---|---|
| சோயா அவரை | ... 1 கோப்பை |
| அரை அவியல் அரிசி (மில்சாட் விரும்பத் தக்கது) | ... 2 கோப்பை |
| தேங்காய்த் துருவல் | ... 1 மேசைக்கரண்டி |
| அப்பச்சோடா | ... ¼ தேக் கரண்டி |
| மிளகு | ... ½ தேக்கரண்டி |
| வெந்தயம் | ... 1 தேக்கரண்டி |
| சீரகம் | ¼ தேக்கரண்டி |
| உப்பு | ... அளவுக்கு |
| இளநீர் | ... 1 தேங்காய் |

தயாரிப்பதற்கு :-

| | |
|---|---|
| தேங்காய் எண்ணெய் | ... 1 மேசைக்கரண்டி |
| துண்டுகளாக்கப்பட்ட வெங்காயம் | ... ½ கோப்பை |
| துண்டுகளாக்கப்பட்ட பச்சை மிளகாய் | ... 6 |
| கடுகு | ... ½ தேக் கரண்டி |
| கறிவேப்பிலை | ... 1 நெட்டு |
| செத்தல் மிளகாய் | ... 3 |
| சீரகம் | ... சிறிதளவு |

தயாரிக்கும் முறை :-

அடுத்த நாள் காலை உணவுக்காயின், சோயா அவரை, அரிசி, வெந்தயம் ஆகிய வற்றை முதல் நாள் மாலையிலேயே நீரில் ஊறவிடுதல் வேண்டும்.

1. நீரில் ஊறிய சோயா அவரையை, மேற் றோலை நீக்கிப் பசையாகும் வரை நன்கு அரைக்கவும்.
2. நீரில் ஊறிய அரிசி, வெந்தயம், மிளகு, சீரகம் ஆகியவற்றை கழுவித் தேங் காய்த்துருவலையும் சேர்த்துஅரைக்கவும்.
3. அரைத்தெடுக்கப்பட்டவற்றுடன் இள நீரையும் சேர்த்துக் கலந்து அடர்த்தி யான மாக்கரைசல் ஒன்றை தயாரிக்க லாம். இதனை மூடிச் சூடான ஒரு இடத் தில் இரவு முழுவதும் வைக்கவும்.
4. காலையில் அப்பச்சோடாவை மாக்கரை சலுடன் கலந்து விடவும். தாளிப்பதற் கான கலவையை பின்வருமாறு தாளிக் கவும்.
5. எண்ணெய்யை ஒரு சட்டியில் கொதிக்க வைத்து கடுகை இடவும். இதற்கு சீர கம், சின்ன வெங்காயம், பச்சை மிள காய், செத்தல் மிளகாய்த் துண்டுகள் ஆகியவற்றைச் சேர்க்கவும். வெங்காயம் பொன் கபில நிறமாக மாறியதும் கறி வேப்பிலையையும் இடவும். தாளிக்கப் பட்ட இக்கலவையை எண்ணெயுடன் அடர்த்தியான தோசை மாக்கரைசலு டன் சேர்த்துக் கலக்கவும். அளவுக்கு உப்பும் இட்டுக் கலக்கவும்.
6. தோசைக்கல்லை அடுப்பில் வைக்கவும். தோசைக் கல்லுக்கு சிறிதளவு நல்லெண் ணெய் தடவிவிடவும். எண்ணெய் சூடானதும், ஒரு அகப்பை மாக்கரை சலை எடுத்து கல்லில் கட்டமாக மெல் லிய படையாகப் பரவி விடவும். சிறு துவாரங்கள் தோசையில் தோன்றியதும் மறு பக்கம் புரட்டி இரண்டொரு நிமி டத்துக்கு வேகவிடவும். இக்கலவையில் 20 - 25 தோசைகள் தயாரிக்கலாம்.

## சோயா அவரை வடை

### (தயாரிப்பு முறை 1)

தேவையான பொருட்கள் :

| | |
|---|---|
| வறுத்த சோயா அவரை விதை | — 1 கோப்பை |
| பொடியாக்கிய செத்தல் மிளகாய் | — 3 |
| துண்டுகளாக்கப்பட்ட பச்சை மிளகாய் | — 3 |
| துண்டுகளாக்கப்பட்ட வெண்காயம் | — 2மேசைக்கரண்டி |
| கறிவேப்பிலை | — 1 நெட்டு |
| மாஸ் தூள் | — ½மேசைக்கரண்டி |

எண்ணெய் பொறிப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கும் முறை :

1. வறுத்த சோயா அவரை விதைகளை நீரில் ஊற விடவும். இதன் அரைப் பகுதியை நன்கு அரைக்கவும். மற்றைய அரைப் பகுதியைப் பொடியாக்கவும்.

2. செத்தல் மிளகாய்ப் பொடி, பச்சை மிளகாய், வெண்காயம், கறிவேப்பிலை, மாஸ் தூள், உப்பு இவற்றையும் அரைத்த சோயாஅவரையுடன் சேர்த்து நன்கு பிசையவும்.

3. தேசிக்காயளவு உருண்டைகளாக எடுத்துச் சிறிது தட்டையாக்கவும்.

4. நன்கு கொதித்த எண்ணெயில் பொரிக்கவும்.

5. பொரித்தெடுத்து கடதாசியில் இடும் போது மேலதிகமாயுள்ள எண்ணெய் கடதாசியில் ஊறிவிடும்.

## சோயா அவரை வடை
### (தயாரிப்பு முறை 2)

தேவையான பொருட்கள் :

அவித்த சோயா அவரை — 1 கோப்பை
பொடியாக்கிய மிளகாய் — 2மேசைக்கரண்டி
துண்டுகளாக்கப்பட்ட வெண்காயம் — 2மேசைக்கரண்டி
மெல்லிய துண்டுகளாக்கப்பட்ட பச்சை மிளகாய் — 1மேசைக்கரண்டி
கறிவேப்பிலை — 1 நெட்டு
மாஸ் தூள் — ½ மேசைக்கரண்டி
மஞ்சள் தூள் — சிறிதளவு
எண்ணெய் பொரிப்பதற்கு

தயாரிக்கும் முறை :-

1. சோயா அவரை விதைகளை நன்கு அரைக்காது அரைப் பதத்தில் அரைக்கவும்.
2. மேலுள்ள பொருட்கள் அனைத்தையும் சேர்த்து நன்கு பிசையவும்.
3. தேசிக்காய் அளவு உருண்டைகளாக்கி சிறிது தட்டையாக்கவும்.
4. நன்கு கொதித்த எண்ணெயில் பொரிக்கவும்.
5. பொரித்தெடுத்துக் கடதாசியில் இடும் போது. மேலதிக எண்ணெய் கடதாசியில் ஊறிவிடும்.

## போஷாக்கிலும் உணவுற்பத்தி ..........
(13ஆம் பக்கத் தொடர்)

பெண்கள் தோட்டச் செய்கையில் ஈடுபட்டு உற்பத்தியை சொந்த தேவைகளுக்கு எடுப்பதுடன் மிகுதியை அயலவர்களுக்கோ வர்த்தகர்களுக்கோ விற்பதன் மூலம் மேலதிக வருமானத்தைச் சம்பாதிக்கிறார்கள்.

வீட்டுப் பாவனைக்கு புத்தம் புதிய மரக்கறி, பழவகைகள் குறைந்த செலவில் கிடைப்பது ஒரு பாக்கியம் என்றே நான் கருதுகிறேன். எனவே நில நீர் வசதியுடைய பெண்கள் வேறு பயிர்ச் செய்கையாளர்களில் தங்கியிராமல் இதனில் மேலும் கவனம் செலுத்துவதால் நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவலாம் என்பது எனது முழு நம்பிக்கை.

பெண்கள் உணவு சம்பந்தப்பட்ட பல் வேறு தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர். முக்கியமாக பழச்சாறு, தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுவகைகள், ஜாம், அச்சாறு, ஊறுகாய் என்பன தயாரிக்கும் தொழிசாலைகளில் அதிகமான பெண்கள் வேலை செய்கின்றனர். பெண்களுக்கு இயற்கையாகவே போஷாக்குப் பற்றிய ஆர்வமும், ஊக்கமும் இருப்பதால் அந்தந்தத் துறைகளில் பெண்கள் கடமையாற்றுவதும் தலைமை தாங்குவதும் எங்கள் நாட்டிலும் மேல் நாடுகளிலும் ஒரு சாதாரண நிகழ்ச்சியாக இருக்கின்றது.

விவசாய உற்பத்தி முன்னேற்றத்திற்கு ஆராய்ச்சி முதுகெலும்பாக இருக்கின்றது. தற்போது பல்கலைக் கழகங்களுக்கு செல்லும் பெண்களின் எண்ணிக்கை பெருகிவருகிறது. பட்டத்துடன் நில்லாமல், உயர் பட்டப் படிப்பிலும், உயர்மட்ட ஆராய்ச்சிகளிலும் பெண்கள் ஈடுபட்டு புதுப்புதுகண்டுபிடிப்பை விவசாயத் துறையில் ஏற்பத்தி உணவுற்பத்தியில் பங்கு கொள்கின்றனர். இது போன்ற சாதனைகள் மேலும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

எந்தவித முன்னேற்றத் துறையில்பெண்கள் ஈடுபட்டாலும் குடும்ப நிர்வாகமும், குடும்ப நலமும் பெண்களின் ஈடுபாட்டிலும் ஆர்வத்திலுமே தங்கியிருக்கின்றன. இதனையுணர்ந்து பெண்கள் தங்களுடைய கடமையை மறவாது பொறுப்புணர்ச்சியுடன் நடந்து குடும்ப நலத்தையும் சந்தோஷத்தையும் பேணி அதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி கோல வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமநல

# குறுக்கெழுத்துப் போட்டி-7

| முதற் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றும் பரிசு |
|---|---|---|
| 25/- | 15/- | 10/- |




பெயர்:..........................................................................

முகவரி:........................................................................

..........................................................................

### போட்டி நிபந்தனைகள்

1. கமநலத்தில் வெளிவரும் கூப்பன்களையே நிரப்பியனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்ப முடியும். ஆனால், ஒருவருக்கு ஒரு பரிசே வழங்கப்படும்.
2. போட்டி முடிவுகள் குறித்து கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் இயக்குநரே இறுதி முடிவு எடுப்பார்.
3. போட்டி தொடர்பாக எவ்வித கடிதப்போக்குவரத்து களும் வைத்துக்கொள்ளக்கூடாது.
4. குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று சரியான விடைகளைக் கொண்ட கூப்பன்களுக்கு முறையே, முதலாம். இரண்டாம், மூன்றும் பரிசுகள் வழங்கப்படும்.
5. கூப்பன்களை அனுப்ப வேண்டிய முகவரி :
''கமநலம்'' த. பெ. எண் 1522, கொழும்பு-7.
முடிவு திகதி : 1982 டிசம்பர் 15.

### இடமிருந்து வலம் :

1. செயற்துறை
5. எகிப்தில் உள்ள ஒரு நதி.
7. தசரதனின் புதல்வன்
8. வீதிகளின் குறுக்கே இது இல்லாவிடின் வெள்ளம் விட்டுவைக்காது.
9. இது தென்பட்டால் மழை பெய்யலாம்.
11. இது காட்டில் தேனைத் தேடி அலையும்.
12. ஊமைக்கு இதுவே மொழி
13. கண்ணப்பன் இதனாலேயே தன் கண்ணைத் தோண்டினன். (சொற் குழப்பம்)
15. இதுவும் ஒரு கற்பக தரு.
17. வட மாகாணத்தில் ஒரு முக்கிய தொழிற்சாலை அமைந்துள்ள ஓர் இடம்.
19. உழவர் திருநாள்.
21. 'பேரும் .....' என்ற பெயரில் ஒரு சினிமா படம் வெளியாகியது. (வலமிருந்து இடம்)
23. சிலர் கன்னத்தை இது ஆக்கிரமிக்கும். (வலமிருந்து இடம்)
24. வெளி அல்ல.
25. சலசலத்த வண்ணம் ஓடும் இவைகள்

### மேலிருந்து கீழ் :

1. இப்பழத்தைத் தின்னப் போய் ஒரு நரி ஏமாந்ததாகக் கதை கூறுவர்.
2. அம்பு (முனை மாறி நிற்கிறது)
3. முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவை (சொற்குழப்பம்)
4. ஆத்மாவைப் பாதிக்கும் மும்மலங்களில் ஒன்று.
5. ஒரு வாயு
6. குடிசை (குழம்பிக் கிடக்கிறது)
8. பூ மணத்தை இப்படியெல்லாம் மணக்கும் என்பர் (கீழிருந்து மேல்)
10. ஓர் ஆணின் பெயர்(சொற்குழப்பம்)
14. ஆடு, மாடு, எருமை ஆகியன பன்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கிருமிநாசினிக்கும் இதற்கும் நிறைய சம்பந்தம் உண்டு.

16. ஒரு மிருகம். (கீழிருந்து மேல்)

18. தவறு

20. இரவு அல்ல (சொற் குழப்பம்)

22. 'கமக்காரன் நிலத்தை ..... வான்' (கீழிருந்து மேல்)

| முதலாம் பரிசு பெறுபவர் : | இரண்டாம் பரிசு பெறுபவர் : | மூன்றும் பரிசு பெறுபவர் : |
|---|---|---|
| செல்வி பரமேஸ்வரி தெய்வநாயகம் தாதிமார் பயிற்சிக் கல்லூரி மட்டுநகர் | செல்வி. கி. புஷ்பாம்பிகை, பன்சல வீதி, கென்கல்லே. | கே. இராஜகோபால், ''பொன்மனே'' தொல்புரம், சுளிபுரம். |

## சரியான விடைகளை எழுதியோர்

1. அஹ்மது சுக்ரி, மடவள பஸார்.
2. லி. நக்கீரன், குருக்கள் மடம்.
3. ஆர். சிசிலியா, யாழ்ப்பாணம்.
4. ஏ. ஆர். பி. நிர்மலன், ஏழாலை.

## கமநலம் குறுக்கெழுத்துப் போட்டி — 6

### விடைகள்

இடமிருந்து வலம் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தத்துக்கிளி | 13. | கம்பு | 20. | கைராசி |
| 6. | வடி | 14. | பகைவன் | 22. | பலா |
| 7. | கால்நடை | 16. | தீ | 23. | புண் |
| 10. | நடிப்பு | 18. | காடு | 24. | மதன் |
| 12. | யல | 19. | புரி | 25. | மும்மூட்டுக்கோரை |

மேலிருந்து கீழ் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | தன்நம்பிக்கை | 8. | வயல் | 18. | காலாண்டு |
| 2. | துடிப்பு | 9. | நலன் | 19. | புற்தரை |
| 3. | வக்பு | 11. | கடி | 21. | ராகம் |
| 4. | காளி | 15. | படுக்கை | 23. | பட் |
| 5. | பீடை | 17. | பசி | 24. | கோன் |

## வாசகர் கடிதங்கள்

### பரீட்சையில் திறமைச் சித்தி

கடந்த ஆண்டு 'கமநலம்' சந்தாதாரராக சேர்ந்து நான்கு இதழ்களையும் பெற்று வந்தேன். இவற்றைப் படித்து வந்ததினால் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றேன். இதற்கெல்லாம் தங்கள் நிறுவனமே முக்கிய காரணம்.

— எஸ். கேதீஸ்வரன்,
சரஸ்வதி ஸ்டோர்ஸ்,
10ஆம் கட்டை,
உயிலங்குளம்.

### பூரண அக்கறை

'கமநலம்' கமக்காரர்களின் நலத்தில் பூரண அக்கறையையும், எதிர்காலச் சுபீட்சத்தையும் ஏற்படுத்தும் அளவிடற்கரிய பொக்கிஷங்கள் இச்சஞ்சிகையில் அடங்கியுள்ளன. இச்சஞ்சிகை விவசாயம் கற்கும் மாணவர்கள் சகலரும் கற்றுப் பூரண பயன் பெறக்கூடியதாகவுள்ளது.

— வி. தெய்வநாயகம்,
(கே. வி. எஸ்.)
குருக்கள் வீதி,
அக்கரைப்பற்று-7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் தோட்டம் அமைப்பது எப்படி ?

வீட்டுத் தோட்டம் எவ்வாறு அமைப்பது என்றும் எவ்வாறான மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யலாம் என்றும், வருடம் பூராவும் மரக்கறிகளைப் பெறுவதென்றால் எவ்வெவ் மரக்கறிகளை பாத்திகளில் நட வேண்டும் என்றும் கேட்டு எமது வாசகர்கள் பலரும் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். வாசகர்களின் நன்மை கருதி அவ்விபரங்களை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

உங்களுக்கு விரும்பிய அளவுகளில் நீங்கள் வீட்டுத் தோட்டத்தை அமைத்துக் கொள்ளலாம். பயிரிடவுள்ள மரக்கறிகளுக்கு ஏற்ற வகையில் பாத்திகளை அமைக்க முடியும். பொதுவாக 50' × 40' நிலத்தில் பாத்திகளை அமைக்கவும்.

பாத்திகளை அமைக்க முன் 1½ அடி ஆழத்திற்கு நிலத்தை வெட்டி அதனுள் இருக்கும் மண்ணை வெளியே எடுத்து அதில் இருக்கும் கல்லையும், கட்டிகளையும் அகற்றி இருபாட்டு மண் நிலைக்கு அமைத்து 4' × 4' என்ற ரீதியில் பாத்திகளை அமைக்கவும். பின் 50 இறாத்தல் கலவை எருவை அல்லது இரசாயனக் கலவையை கலந்து பாத்தியில் நிரப்பவும்.

பண்படுத்திய பாத்தியில் பின்வரும் அட்டவணையில் உள்ளபடி நாற்றுக்களைப் போட்டுப் பராமரித்து வந்தால் வருடம் பூராவும் போதிய மரக்கறிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

கலப்பில்லாத திடமான முளைப்புத் திறன் உள்ள விதைகளைப் பாவிக்க வேண்டும். களைகளையும், செடிகளையும் பயிருக்குச் சேதம் வரா வண்ணம் களைந்தெடுக்க வேண்டும். இளம் பயிருக்கு வாரத்திற்கு 2 அல்லது 3 முறை நீர்ப்பாய்ச்ச வேண்டும். குறைந்த, ஈரத்தன்மை, கூடிய ஈரத்தன்மை ஆகிய இரு நிலைகளையும் தவிர்த்து சம நிலையை ஏற்படுத்தவேண்டும்.

நல்ல பயிர் வளர்ச்சிக்கு உரச் சத்து மாத்திரமன்றி போதிய காற்றோட்டமும், நீரோட்டமும் உள்ள நிலம் அவசியம்.

| பாத்தி | பருவம் | மரக்கறி |
|---|---|---|
| 1. | ஆனி — ஆடி | கீரை |
| | ஆவணி—கார்த்திகை | வெண்டி |
| | மார்கழி — மாசி | வெங்காயம் |
| | பங்குனி — ஆனி | கத்தரி |
| 2. | ஆனி—புரட்டாசி | வெண்டி |
| | ஐப்பசி — பங்குனி | கத்தரி |
| | மாசி — பங்குனி | கீரை |
| | சித்திரை — வைகாசி | முள்ளங்கி |
| 3. | ஆனி — புரட்டாசி | தக்காளி |
| | ஐப்பசி — மார்கழி | முள்ளங்கி |
| | தை — மாசி | கீரை |
| | பங்குனி — ஆனி | வெண்டி |
| 4. | ஆனி — புரட்டாசி | கத்தரி |
| | ஐப்பசி — கார்த்திகை | கீரை |
| | மார்கழி — பங்குனி | வெண்டி |
| | சித்திரை — ஆனி | வெங்காயம் |

வெங்காயம் : ஒரு மாத நாற்றுக்கள் 2' × 2½' இல் நடவும். ஆனி, ஆடி, மாசி, பங்குனியில் விதைப்பது நன்று. நட்டு 50 நாட்களில் காய்க்கும். வயது 3 - 7 மாதம். 100 சதுர அடியில் 160 இறாத்தல் காய் கிடைக்கும்.

வெண்டி : பாத்தியில் விதையை ஊன்றவும். 2' × 2' இல் பாத்திகளைப் போடவும். 40 நாட்களில் காய்க்கும். வயது 3 - 4 மாதங்கள். 100 சதுர அடியில் 80 இறாத்தல் காய் கிடைக்கும்.

கீரை : 4' × 4' பாத்தியில் 2 கிராம் விதையைத் தூவவும். ஆண்டு முழுவதும் விளையும். 40 நாட்களில் பயன் கிட்டும். வயது 3 மாதங்கள். கிழமைக்கு 100 சதுர அடியில் 10 இறாத்தல் கீரை கிடைக்கும்.

தக்காளி : 2' × 2' பாத்திகளில் நடவும். 60 நாட்களில் பயன். வயது 3½ - 5 மாதம். 100 சதுர அடிக்கு 150 இறாத்தல் பழம் கிடைக்கும்.

முள்ளங்கி : 1' × 1' பாத்தியில் நடவும். 40 நாட்களில் பயன். வயது 1½ - 2 மாதம். 100 சதுர அடிக்கு 100 இறாத்தல் கிழங்கு கிடைக்கும்.

வேலியில் படரும் பாகல், பிசுக்கு, புடல் முதலியவற்றையும் உண்டாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-P O ROAD
NALLUR, JAFFNA
No

# கமநலம் பழைய பிரதிகள்

எம்மிடம் பழைய 'கமநலம்' சஞ்சிகைகளில் சில இதழ்கள் உள்ளன. அவை பற்றிய விபரங்களை இங்கு தருகிறோம். இவற்றினை நீங்கள் உரிய பணத்தை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1975 | — | மார்கழி | — | -/25 | சதம் |
| 1976 | — | பங்குனி | — | -/25 | சதம் |
| | — | ஆனி | — | -/25 | சதம் |
| | | புரட்டாதி | — | -/25 | சதம் |
| | — | மார்கழி | — | -/25 | சதம் |
| 1977 | — | பங்குனி | — | -/75 | சதம் |
| | — | ஆனி | — | -/75 | சதம் |
| 1979 | — | பங்குனி | — | 1.50 | சதம் |
| | — | ஆனி | — | 1.50 | சதம் |
| 1980 | — | பங்குனி—ஆனி | — | 1.50 | சதம் |
| | — | மார்கழி | — | 1.50 | சதம் |
| 1981 | — | பங்குனி | — | 1.50 | சதம் |
| | — | ஆனி | — | 1.50 | சதம் |
| | — | புரட்டாதி | — | 1.50 | சதம் |
| | — | மார்கழி | — | 1.50 | சதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Publications of the Agrarian Research and Training Institute*

| RESEARCH STUDY SERIES | | LOCAL |
|---|---|---|
| 1. Kurunegala District Development Project - An Analysis of the Pre-Project Situation — Gunawardena A.M.T., Sumanasekera H. D., Gunawardena P. J., Wijetunge M. (1981) | Rs. | 25.00 |
| 2. The Economics of Seasonal Labour Migration in Sri Lanka - Crooks G. R., Ranbanda H. A. (1981) | Rs. | 20.00 |
| 3. Research Project in Agricultural Planning - A Demonstration of Resource Based Socio Economic Planning in Matara District (1982) | Rs. | 50.00 |
| 4. Farmers Knowledge and Perception of Improved Technology — Gunawardena A. M. T., Wickremasinghe M. L. (1980) | Rs. | 10.00 |
| 5. Factors Influencing Vegetable Prices - A Study of the Vegetable Economics in Sri Lanka — Gunawardena P. J., Chandrasiri L. R. A. (1980) | Rs. | 20.00 |
| 6. Rainfed Farming in the Dry Zone of Sri Lanka — Samad M., Goonaratne, Wickramasekera W., Wijeratne C. M. (1980) | Rs. | 15.00 |
| 7. Agriculture and Society in the Low Country (Sri Lanka) — Moore M. P., Wickramasinghe G. (1980) | Rs. | 35.00 |

| OCCASIONAL PUBLICATION SERIES | | |
|---|---|---|
| 8. Water Management Under Small Village Tanks — Gunawardena A. M. T. (1981) | Rs. | 15.00 |
| 9. Training and Visit System of Extension — Gunawardena A. M. T., Chandrasiri A. (1981) | Rs. | 25.00 |
| 10. Coconut Based Processing Industries in Matara District and Their Potential (1982) | Rs. | 25.00 |

Inquiries ;

Publication Assistant,
Agrarian Research and Training Institute,
P. O. Box 1522,
114, Wijerama Mawatha,
Colombo-7 - SRI LANKA.

Printed at The Kumaran Press, Dam Street, Colombo-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org